12th AUGUST 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 43 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com

## 320 தேர்தல் முறைப்பாடுகள்

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான தேர்தல் முறைப்பாடுகள் மேலும் அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜூலை 31 ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் (10) வரை 320 தேர்தல்

02ம் பக்கம்பார்க்க...

# கருத்து கணிப்பில் சஜித் முன்னிலை



03ம் பக்கம்பார்க்க...



## தீர்வுத் திட்டத்தை ஆதரிப்போருக்கே தமிழரசுக் கட்சி ஆதரவு

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரதான அரசியல் கட்சி வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு இன்று நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அக் கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன்

02ம் பக்கம்பார்க்க...

## எமது கட்சி ஆதரிக்கும் வேட்பாளருக்கே வெற்றி

### புத்தளத்தில் றிஷாத் பதியுதீன்

(ஐ. ஏ. காதிர் கான்)

"தமது கட்சி ஆதரிக்கும் ஜனாதிபதி வேட்பாளரே வெற்றி பெறுவார்" என, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாத் பதியுதீன் சூளுரைத்தார்.

"எதிர்வரும் 14 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் தனது கட்சி யாரை ஆதரிக்கும் என்பதை உத்தியோக பூர்வமாக அறிவிப்போம்" என்றும் அவர் கூறினார்.



02ம் பக்கம்பார்க்க...

### வியாழனன்று வேட்பு மனு தாக்கல்

## ட்ரோன் கமெரா ஸ்னைப்பர்களுடன் 1500 பொலிசார் கடமையில்

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் தினமான எதிர்வரும் வியாழன் அன்று தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ட்ரோன் கருவிகள், ஸ்னைப்பர்கள் சகிதம் 1,500 க்கும் மேற்பட்ட பொலிஸ

02ம் பக்கம்பார்க்க...

## சமூக ஊடகங்களுக்கும் ஊடக நெறிமுறைகள் பொருந்தும்; மீறினால் சட்ட நடவடிக்கை

### பிரதித் தேர்தல் ஆணையாளர் பியூமி ஆட்டிகல

(ஐ. ஏ. காதிர் கான்)

"தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் தேர்தல் தொடர்பான அனைத்து நெறிமுறைகளும், நாட்டில் இயங்கும் சகல இணையத்தளங்களுக்கும் பொருந்தும்" என, பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் பியூமி ஆட்டிகல தெரிவித்தார்.



02ம் பக்கம்பார்க்க...

## உலகின் அலட்சியம்; எங்களை மன்னியுங்கள்


### அல்தாபின் தாக்குல் குறித்து ஐ.நா அறிக்கையாளர்




ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதிகள் பற்றிய ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளரான பிரான்செஸ்கா அல்பானீஸ், அல்-தபின் பள்ளி மீதான தாக்குதலைத் தொடர்ந்து, காசாவில் பாரிய இரத்தக்களரிக்கு உலகின் "அலட்சியம்" என குறிப்பிட்டு, கண்டனம் தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

02ம் பக்கம்பார்க்க...

## ஜனாதிபதி தேர்தலில் ரொஷான் போட்டி



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க போட்டியிடவுள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில்

02ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## 320..

(முன் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும், அதே நாள் 24 மணித்தியாலங்களில் மாத்திரம் 51 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

## தீர்வுத்..

(முன் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தல் களத்திலிருக்கும் பிரதான வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க,சஜித் பிரேமதாச,அனுர குமார திஸநாயக்க,நாமல் ராஜபக்ஷ ஆகியோருடன் தமது தீர்வுத் திட்டத்தை முன் வைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவ் வேட்பாளர்கள் தெரிவிக்கும் நிலைப்பாட்டினைப் பொருத்தே எந்த வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவது பற்றிய இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எமது...

(முன் பக்கத் தொடர்ச்சி)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி, எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது யாரை ஆதரிப்பது என்பது குறித்து, புத்தளம் மாவட்ட ஆதரவாளர்களுடனான சந்திப்பு, நேற்று (10) இரவு புத்தளம் தில்லையடி பகுதியில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான என்.டி.எம். தாகார், எஸ்.ஏ. எஹியா, புத்தளம் நகர சபை முன்னாள் பிரதித் தலைவர் ஏ.ஓ. அலிகான் உட்பட கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட ஆதரவாளர்களின் கருத்துக்களையும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கேட்டறிந்து கொண்டார்.

## சமூக...

(முன் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் காலத்தில் ஊடகங்கள் நடந்து கொள்ள வேண்டிய முறை குறித்து தெளிவுபடுத்தும் நோக்கில், அரசாங்க தகவல் திணைக்களமும், தேர்தல்கள் ஆணைக்குழுவும் இணைந்து (09) வெள்ளிக்கிழமை காலை, கொழும்பு நாராஹேன்பிட்டவிலுள்ள அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில், ஊடக செயலமர்வொன்றினை ஏற்பாடு செய்திருந்தது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது,

"தேர்தல் காலத்தில், ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் நெறிமுறைகள் மற்றும் சட்ட திட்டங்களுக்கு அமைவாக, சகல இணையத்தள ஊடகங்களும் செயற்பட வேண்டும் என்பதுடன், விரைவில் ஊடக ஒழுக்கக்கோவை தொடர்பான வர்த்தமானி அறிவித்தலொன்றும் வெளியிடப்படும்.

இந்தத் தேர்தலில், இயன்றளவு பக்க சார்பின்றி அனைத்து ஊடகங்களும் நடந்து கொள்ள வேண்டும். இதற்காக, தேவையான ஆலோசனைகளை வழங்க, தேர்தல்கள் ஆணைக்குழு எந்நேரத்திலும் தயாராக உள்ளது.

தேர்தல் காலத்தில் எந்தவொரு கட்சிக்கும் அநீதி ஏற்படும் விதத்தில் நடந்து கொள்ளக் கூடாது. அதேபோல், எந்தவொரு வேட்பாளரையும் அவமரியாதைக்கு உட்படுத்தி எழுதவும் கூடாது.

ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் தர்ம சங்கடமான முறையில் நடந்து கொள்ளவும் கூடாது. செய்திகளை, திரிவுபடுத்தி எழுதவும் கூடாது. உள்ளதை, உள்ளபடி எழுத வேண்டும்.

இவ்வாறு செயற்படும் ஊடகங்கள் தொடர்பில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஆணைக்குழு தயார் நிலையில் உள்ளது.

தற்போது " டிக்டொக்" மற்றும் "இன்ஸ்டாகிராம்" போன்றவற்றை, இளைஞர்களில் பெரும்பாலானோர் பாவித்து வருகின்றனர்.

முதன் முறையாக வாக்களிக்கச் செல்லவிருக்கும் இவ்வாறான இளைஞர் யுவதிகளின் வாக்களிப்பு தொடர்பான விவகாரங்கள் சமூக இணையத்தளங்களுடன் இணைந்திருப்பதால், இது தொடர்பிலும் ஆணைக்குழு, அதன் விசேட அவதானத்தைச் செலுத்தி உள்ளது.

குரோதமான சொற்பிரயோகங்கள், இழிவுபடுத்தும் இம்சைக்குள்ளாக்கும் சொற்களையும் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் தவிர்ந்து நடந்து கொள்ள வேண்டும். இது தொடர்பிலும் ஆணைக்குழு தனது கவனத்தைதைத் திருப்பி உள்ளது.

எனவே, தமது அறிவாற்றலைப் பயன்படுத்தி, உள்ளத்தைத் தூ ய்மையாக வைத்துக் கொண்டு, மிகவும் நிதானமாக, நடு நிலையில் இருந்து செய்திகளைச் சேகரித்து வெளியிடுமாறும், பதிவிடுமாறும் ஆணைக்குழு சார்பாக வேண்டிக் கொள்கின்றேன் " என்றார்.

அசு ர வேகத்தில் வலம் வந்து கொண்டிருக்கும் உதயம் பத்திரிகையில் உங்களது நிறுவனங்களின் விளம்பரங்களை பிரசுரிக்க வேண்டுமாயின் தொடர்புகளுக்கு:
075 5 840830

## வியாழனன்று..

(முன் பக்கத் தொடர்ச்சி)

ார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தேர்தல் ஆணையகத் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் விரிவான பாதுகாப்புத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது

இதன் பின்னரே குறித்த பாதுகாப்பு ஏற்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

## ஜனாதிபதி...

(முன் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விளையாட்டுத் துறை அமைச்சுப் பதவியை வகித்த இவர் சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டதால் முறுகவல் நிலை தோன்றியதில் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்தார்.

## உலகின்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

"இஸ்ரேல் பாலஸ்தீனியர்களை இனப்படுகொலை செய்கிறது என அல்பானீஸ் ஓ இல் ஒரு இடுகையில் எழுதினார்.

"சர்வதேச சட்டத்தின் மிக அடிப்படையான அர்த்தத்திற்கு மதிப்பளித்து, அவர்களைப் பாதுகாக்க எங்களின் கூட்டு இயலாமைக்காக பாலஸ்தீனியர்கள் எங்களை மன்னிக்கட்டும்."எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.






# சூழலை பாதுகாக்கும் நோக்கில் நடை பவனி






(பாரா தாஹீர்)

டெங்கு நுளம்பை ஒழித்து சூழலை பாதுகாக்கும் நோக்கில் கே/மாவ/ திப்பிட்டிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தில்" ஆரோக்கியமான சூழல் வளமான வாழ்வுக்கான முயற்சியில் கைகோர்த்திடுவோம்" எனும் தொனிப் பொருளில் நடை பவணியொன்று நடைப்பெற்றது.

பாடசாலை அதிபர் எம். எஸ். எம். அப்துல்லாஹ் (நளீமி) தலைமையில் நடைபெற்ற இவ் நடைப்பவணியில் உப அதிபர் எம். எம். எம். பைஸர், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் செய்யது உசைன், வில்பொல ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் பார்ஹான் உமர், அல் அரபா ஆரம்ப பாடசாலை அதிபர் ஷிரீன் பர்ஹானா மற்றும் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

---

## கருத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

Lanka bizz என்ற இணையத்தளம் மேற்கொண்ட ஜனாதிபதி தேர்தல் கருத்துக் கணிப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாச முன்னிலையில் உள்ளார்.

Ai தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஆகஸ்ட் 10 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இக் கருத்துக் கணிப்பில் 34 வீத வாக்குகளைப் பெற்று சஜித் பிரேமதாச முதலிடத்தைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இக கருத்துக் கணிப்பின்படி தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அனுர குமார திஸாநாயக்க 33 வாக்குகளைப் பெற்று ஏட்டிக்குப் போட்டியாக உள்ளார்.

இதன் மூலம் சஜித் பிரேமதாச, அனுர குமார திஸாநாயக்க ஆகியோருக்கிடையில் கடும் போட்டி நிலவுவதை அவதானிக்க முடிகின்றது.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ 18 வீத வாக்குகளையும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 10 வீத வாக்குகளைப் பெற்று நான்காமிடத்தையே பெற்றுள்ளார்.






www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 AUGUST 12 - MONDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# ஜனாதிபதி தேர்தலில் முஸ்லிம்களின் பங்கு

இன்னும் 39 நாட்களில் நாட்டின் அடுத்த ஐந்து ஆண்டுக்கான தலைவிதியை தீர்மானிக்கும், முழு நாட்டு மக்களும் வாக்களிக்கும் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவிருக்கிறது. இதுவரை 27 பேர் தேர்தலில் போட்டியிட தீர்மானித்துள்ளனர். இதில் 21 பேர் சிங்கள இனத்தவரும் ஒருவர் தமிழரும் ஆவார். இவர்களில் ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச, நாமல் ராஜபக்ச, அனுர குமார திசாநாயக்க ஆகியோர் பிரதான அபேட்சகர்களாக இடம்பெறுகின்றனர்.

தேர்தலில் முஸ்லிம்கள் யாருக்கு ஆதரவு தெரிவிக்கப் போகிறார்கள் என்ற கேள்வி பரவலாக எழுப்பப்படுகிறது. பொதுவான கணிப்பின்படி முஸ்லிம்கள் ரணில் விக்ரமசிங்க சஜித் பிரேமதாச அனுர குமார திசாநாயக்க ஆகிய மூவரில் ஒருவருக்கே வாக்களிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. முஸ்லிம் கட்சிகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதாக அறிவித்துள்ளது. முஸ்லிம்களின் மற்றைய கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இதுவரையில் தான் யாரை ஆதரிக்கப் போவதாகவும் அறிவிக்கவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கப் போவதாக அறிவித்துள்ள முஸ்லிம்களின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சில நிபந்தனைகளுடனேயே சஜித் பிரேமதாசவை ஆதரிக்கப் போவதாக அறிவித்திருக்கும் நிலையில் அவை என்ன நிபந்தனைகள் என இதுவரையில் பகிரங்கப்படுத்தப்படவில்லை. மேலும் முஸ்லிம் சமூகத்தின் பிரதான கட்சிகளில் ஒன்றான இந்த முஸ்லிம் காங்கிரஸ் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவித்தமைக்கான காரணங்களும் இதுவரையில் தெரிவிக்கப்படவில்லை.

சஜித் பிரேமதாசவை பொறுத்த வரையில் முஸ்லிம்கள் தொடர்பாக தன் கட்சியின் நிலைப்பாடுகளை ஏற்கனவே அறிவித்திருந்தார். கொரோனா காலத்தில் முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்பு தொடர்பாக நியாயமான தீர்வு ஒன்றை தனது அரசு வழங்கும் என சஜித் அறிவித்திருக்கிறார்.

சுயேட்சை அபேட்சகராக போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மத்திய அரசுக்கு மேலதிகமாக ஒவ்வொரு மாகாணத்துக்கும் மாகாண அரசுகளை ஏற்படுத்தப் போவதாக அறிவித்திருக்கிறார். இவ்வாறான வாக்குறுதிகள் தொடர்பில் எந்த வித தெளிவுபடுத்தல்களும் இதுவரையில் வெளியிடப்படாத நிலையில் அந்த தெளிவுகளை பெறுவது முஸ்லிம் கட்சிகளினதும், ஏனைய கட்சிகளினதும் முக்கிய பணியாகும்.

முன்னையே தேர்தல் காலங்களில் முஸ்லிம் சிவில் அமைப்புகள் ஜனாதிபதி வேட்பாளர்களை சந்தித்து முஸ்லிம்களின் தேவைகளை முன்வைப்பர். ஆனால் அது தேர்தலோடு முடிந்து விட்ட கதையாக அமைந்துவிடும்.

ஆனால் இம்முறை எந்த சிவில் அமைப்புகளும் இவ்விடயத்தில் ஆர்வம் காட்டுவதாக தெரியவில்லை. முஸ்லிம் கட்சிகளும் சிவில் அமைப்புகளுக்கு தனது கோரிக்கைகளை தெளிவுபடுத்துவது சிறந்தது. சமகாலத்தில் முஸ்லிம் சமூகம் அனேக பிரச்சனைகளை எதிர்நோக்கி வருகிறது. பிரச்சனைகளை சகல பிரதான வேட்பாளர்களுக்கும் சமர்ப்பித்து, அவை தொடர்பில் அவர்களது நிலைப்பாடுகளை அறிந்து கொள்வது அவசியமாகும்.

நாடு வங்குரோத்தில் இருக்கும் இந்நிலையில் இடம் பெறவிருக்கும் இந்த ஜனாதிபதி தேர்தல் எதிர்காலத்தை தீர்மானிக்கும் ஒரு முக்கிய தேர்தலாக அமையவிருப்பதனால் நாட்டை பொருளாதார ரீதியாக கட்டி எழுப்ப வேண்டியது அவசியமான பணியாக நோக்கப்படுகிறது. முஸ்லிம் கட்சிகள் சமூக நலனை மட்டுமின்றி நாட்டின் நலனையும் கருதிக் கொண்டு தனது தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

அதே நேரம் நாட்டில் அமைதியான ஒரு தேர்தல் நடப்பதற்கு முஸ்லிம்கள் தங்களாலான பங்களிப்புகளை முழுமையாக வழங்க வேண்டும். சுயநலன்களுக்கு அப்பால் நாட்டின் பொது நலன்களுக்கும் நாட்டின் முஸ்லிம் தலைவர்கள் செயற்பட வேண்டும். நாடு நலன் பெறாமல் நாட்டு மக்கள் நலன் பெற முடியாது. எனவே முஸ்லிம் சமூகம் நாட்டு நலன்களையும் பிரதானமாகக் கொண்டு தன் முடிவுகளை எடுக்க வேண்டும். முஸ்லிம்கள் முடிவெடுக்கும் விஷயத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என முஸ்லிம் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் சமூகத்துக்கு வழி காட்ட வேண்டும். தேர்தலுக்கு இன்னும் சொற்ப நாட்களே எஞ்சியிருக்கும் நிலையில் சரியான வழிகாட்டல்களை வழங்குவதற்கான கருத்தரங்குகள், விளக்கக் கூட்டங்களை ஏற்பாடு செய்வது அவசியமாகும். தீர்க்கப்படாத நிறைய பிரச்சனைகள் முஸ்லிம் சமூகத்திற்கு காணப்படுவதால் அவற்றை குறைந்தபட்சம் சுட்டுக்காட்டுவதற்காவது முஸ்லிம் அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் முன் வரவேண்டும்.




## இனிப்பும் கசப்பும்



சட்டத்தரணி ஏ.எம்.வைஸ்

# மத்ரஸா கல்வியில் மாற்றம் வேண்டும்

மத்ரஸா பாடத்திட்டத்தினை சீரமைப்பதற்கும் அதை தயாரிப்பதற்கும் ஒரு குழுவினை நியமிப்பதற்காக கடந்த வாரம் ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருந்தது. அந்த செய்தியின் படி முஸ்லிம் கலாசார விவகாரத் திணைக்களமே இந்த குழுவை அமைத்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஓரிரு மாதங்களுக்கு முன் ஒரு பல்கலைக்கழக பேராசியரை சந்தித்தேன். அவர் மத்ரஸா ஒன்றில் கல்வி கற்று அதன் மூலம் உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்று அங்கும் விஷேட சித்தி பெற்று பல்கலைக்கழக விரிவுரையாளராகி பின் விஷேட விரிவுரையாளராக ஆகி கலாநிதி பட்டமும் பெற்று இப்போது பல்கலைக்கழக பேராசிரியராகவும் இருக்கிறார். அவர் என்னை சந்தித்த போது மத்ரஸா பாடத்திட்டத்தை அமைத்து கையளித்து விட்டோம் என்று கூறினார். அதற்கு நியமிக்கப்பட்ட அரச குழுவில் அவரும் இருந்ததாகவும் அதில் இருந்த ஏனைய கல்விமான்களின் பெயர்களையும் கூறினார். அது ஒரு முழுமையான பாடத்திட்டம் என்றும் கூறினார்.

இந்த செய்தி சில மாதங்களுக்கு முன் நான் கேட்ட போது முன் குறிப்பிட்ட செய்தி கடந்த வாரம் வந்த பத்திரிகை செய்தியில் குழு உறுப்பினர்கள் சிலரின் பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் சில மாதங்களுக்கு முன் பாடத்திட்டத்தை கையளித்து விட்டோம் என்று கூறிய பேராசியரியரின் பெயரோ, அவர் கூறிய ஏனைய கல்விமான்களின் பெயர்களோ அந்த பத்திரிகை செய்தியில் இல்லை.

பேராசிரியர் கூறிய பெயர்களும் அந்தப் பேராசிரியரின் பெயரும் அந்த பத்திரிகை செய்தியில் இல்லாததால் இரண்டும் வெள்வேறு குழுக்களாக இருக்க வேண்டும் என்று நினைத்தேன்.

அந்தப் பேராசிரியரின் திறமையையும் அவரின் கல்வித் தகைமையையும் அவரது சமூக ஆர்வத்தையும் அவர் கூறிய ஏனைய குழு உறுப்பினர்களின் கல்வி தகுதி தராதரங்களையும் நான் அறிந்த பின் மத்ரஸாக்களுக்கு ஒரு விடிவு வந்து விட்டது என மகிழ்ந்திருந்த நான் புதிய பெயர்களுடனான புதிய குழுவின் பட்டியலைப் பார்த்ததும் கவலை அடைந்தேன். அந்தக் கல்விமான்கள் அமைத்த பாடத்திட்டத்தை மூலையில் போட்டு புதிதாக சிலரை வைத்து அமைத்திருக்கிறார்களே என்ற கவலை என்னை ஆட்கொண்டது.

அதுமட்டுமல்ல இரண்டு குழுக்களும் இரண்டு பாதையில் ஒன்றுக்கொன்று முரண்பாடாக சென்றுவிட்டால் இதற்கு முன் அமைக்கப்பட்டு செய்யப்பட்ட முஸ்லிம் விவாகச் சட்டத் திருத்தத்திற்கு நடந்த கதை நடந்து விடுமோ என்ற கவலைதான். ஏனென்றால் மத்ரஸா பாடத்திட்டத்திற்கு பல கூட்டங்கள் நடந்தன. பல குழுக்கள் அமைக்கப்பட்டன. அவை அவ்வாறே மறைந்து விட்டன. மறக்கப்பட்டு விட்டன. ஈஸ்டர் ஞாயிறு பிரச்சினையுடன் தனித்தனியே தாம் விரும்பியபடி அமைக்கப்பட்டு தாம் விரும்பிய படி செயற்பட்ட தாம் விரும்பிய படி பரீட்சைகளை நடத்தி தாம் விரும்பிய படி பட்டங்களை வழங்கி வந்த மத்ரஸாக்கள் ஒரு அமைப்பின் கீழ் கொண்டு வர வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. மத்ரஸ ாக்களை மூட வேண்டும் என்றும் சிலர் வலியுறுத்தினர். இறுதியில் ஒரு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று வந்த முடிவு வரவேற்கத்தக்கதாக அமைந்தது. இதன் ஒரு படி தான் முழு நாட்டிற்கும் ஒரே பாடத்திட்டம் என்பது நல்ல முடிவு. தரங்களும் சமமாகி விடும்.

எனவே, ஒன்றிணைந்து இதனைச் செய்ய வேண்டும். ஒரு குழு செய்ய வேண்டும். அது மட்டும் போதாது அந்தக் குழு செய்ய வேண்டும். அது மட்டும் போதாது. அந்தக் குழு இத்துறையில் அனுபவம் உள்ள உயர் கல்வி நிலையில் உள்ள கல்வியியலாளர்களைக் கொண்ட குழுவாகவும் இருக்க வேண்டும. நான் கூறிய பேராசிரியர் மத்ரஸாவில் கற்றவர் அதன் மூலம் பல்கலைக்கலகம் சென்று கலாநிதி பட்டமும் பெற்று விரிவுரையாளராக பல்கலைக்கழக பேராசிரியரானவர். இது போன்று நிறைய இருக்கிறார்கள். நஸ்மியாவில் படித்து கலாநிதி பட்டம் வரை பெற்றவர்களும் உள்ளனர். இவர்களை பயன்படுத்தி இதனை செய்ய வேண்டும்.

இதைவிட்டு சில கொள்கைகளை இறுக்கிப்பிடித்துக் கொண்டு மற்றவர்களை மற்ற தஃவாப் பணிகளை எதிர்த்துக் கொண்டு செயல்படும் உலமாக்களை கொண்ட குழுவாக அமைத்தால் விடயம் நடக்காது. அல்லது சரியாக இருக்காது.

பாடத்திட்டத்தை அமைப்பது மட்டும் போதாது பாடநெறி முடியும் இறுதிப் பரீட்சை பொது பரீட்சையாக மாற வேண்டும். அதை அரச பரீட்சைத் திணைக்களம் நடத்தும் பரீட்சையாக மாற்ற முயற்சிக்க வேண்டும். எமது அமைச்சர்களின் உதவியைப் பெற்று அமைச்சரவை முடிவின் மூலம் இவ்வாறு அரச பரீட்சைத் திணைக்கள பரீட்சையாக மாற்றுவது கடினமான காரியமல்ல.

இன்னும் ஒரு படி மேலே சென்று இதனை ஒரு அரச தராதரப் பத்திரத்துடன் சமப்படுத்த முயற்சிக்கலாம். இதுவும் அமைச்சரவை முடிவுடன் செய்யலாம். உதாரணமாக மௌலவி பரீட்சை க.பொ.த சாதாரணத் தரப் பரீட்சைக்கு சமம் என வர்த்தமானி வெளியிடப்பட்டால் இந்த சித்தியுடன் க.பொ.த உயர் தரப் பரீட்சை எழுதி பல்கலைக்கழகம் செல்லலாம். இதனையும் சிந்திக்க வேண்டும். இதன் மூலம் மத்ரஸா மாணவர்களின் எதிர் காலத்தில் முன்னேற்றம் காணலாம்.

பாடத்திட்டம் வகுப்பவர்களுக்கும் ஒரு வேண்டுகோள் இருக்கிறது. அநேக மத்ரஜாக்கள் அரபு மொழியுடன் முடிந்து விடுகிறது. இதனால் வெளி வரும் மௌலவிகளுக்கு வேறு மொழி தெரியாது. அல்லது சரியாக தமிழையோ சிங்களத்தையோ ஆங்கிலத்தையோ பேசத் தெரியாது. நல்ல உதாரணம் தான் அண்மையில் பஸ்ஸில் பயணம் செய்தபோது ஒரு பெண்ணின் முடியை கத்தரித்த உலமாவுக்கு சிங்கள மொழி தெரியாததால் பிரச்சினை வந்தபோது பதிலளிக்க முடியவில்லை. எனவே தான் அரபுக்கு மேலதிகமாக ஒன்று அல்லது இரண்டு மொழிகளை எழுத பேச தெரியும் வகையில் பாடத்திட்டத்தில் உள்வாங்க வேண்டும்.

அத்தோடு மத்ரஸா அனுமதிக்கு ஒரு வயது குறிக்கப்பட வேண்டும். அல்லது கீழ் வகுப்பு பாடசாகை் கல்வியையும் மத்ரஜாவில் வழங்க வேண்டும். அல்லது காலையில் பாடசாலைக் கல்வியைப் பெறச் செய்து பிற்பகலில் மத்ரஜா கல்வியை வழங்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட வயது வரை பாடசாலை அனுபவத்தை அரசாங்கம் சட்டம் மூலம் கட்டாயப்படுத்தியுள்ளது. நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

# தேசிய ஷூரா சபையின் அதிபர் வான்மை விருத்தி செயலமர்வு




தேசிய ஷூரா சபையின் கல்விக்கான உப குழு வடமேல் மாகாண கல்வி திணைக்களத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த அதிபர் வான்மை விருத்தி செயலமர்வு கடந்த ஆகஸ்ட் மாதம் 3 ஆம் மற்றும் 4 ஆம் திகதிகளில் வயம்ப பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. 2016,2023 ஆகிய ஆண்டுகளில் நியமனம் பெற்ற வடமேல் மாகாணப் பாடசாலை அதிபர்கள் இச்செயலமர்வில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருந்தனர்.

அங்குரார்ப்பண நிகழ்வில் தேசிய ஷூறா சபையின் நிறைவேற்றுக் குழு, கல்விக்கான உபகுழு மற்றும் செயலகக் குழுவின் அங்கத்தவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

தலைவர் ரீ.கே. அஸூர் வரவேற்புரையை நிகழ்த்தியதுடன், ஷூறா சபை தொடர்பான அறிமுகத்தை செயலாளர் சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் வழங்கினார்.

அமர்வுக்குத் தலைமை தாங்கிய வடமேல் மாகாண உதவி கல்விப் பணிப்பாளர் ரியாஸ் முகம்மத் அவர்கள் இச்செயலமர்வின் நோக்கம் மற்றும் செயன்முறை தொடர்பாக விளக்கினார்கள்.

முதலாவது விரிவுரை தேசிய ஷூரா சபையின் உபதலைவரும் ஜாமிஆ நளீமிய்யாவின் சிரேஷ்ட விரிவுரையாளரரும் அதன் இஸ்லாமிய கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியுமான அஷ்ஷேய்க் எஸ்.எச்.எம்.பளீல் அவர்களால் நிகழ்த்தப்பட்டது. "அதிபர் பதவி: அமானிதமும் அருளுமாகும்" என்ற தலைப்பில் அவர் உரை நிகழ்த்தினார்.



இரண்டாவது அமர்வு கலாநிதி ரிஷாத் புஹாரியினால் நிகழ்த்தப்பட்டது. "சமநிலையான அதிபர் வாழ்வு" என்ற தலைப்பில் அவர் கருத்து பரிமாறினார். அதிபர்கள் தனிப்பட்ட, குடும்ப, வான்மைத்துவ, சமூக, ஆன்மீக ரீதியாக அனைத்து துறைகளிலும் சமநிலையை பேணுவதற்கான பல்வேறு உத்திகள் மற்றும் உபாயங்கள் குறித்து அவர் கலந்துரையாடினார்.

மூன்றாவது அமர்வை, பாடசாலை ஒன்றில் இருக்க வேண்டிய பிரதான திட்டம் தொடர்பாக மாஹோ கல்விப் பணிமனையின் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷேக் முஹம்மத் அலி ஜின்னா நளீமி நடத்தினார். பாடசாலைக்கு தேவையான பௌதீக மற்றும் ஏனைய வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கான திட்டங்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி செய்வதற்கான மாஸ்டர் பிளான்களை தயாரிப்பதற்கான அடிப்படைகள் தொடர்பாக அவர் கருத்து பரிமாறினார்.

இரவு அமர்வாக, முல்லைத்தீவு சுப்ரமணியம் ஆரம்ப வித்தியாலயத்தின் அதிபர் நல்லையா அமிர்தநாதன் அவர்களின் அனுபவப் பகிர்வு இடம்பெற்றது. திரு.நல்லையா அமிர்தநாதன் அவர்கள் யுத்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட தனது பாடசாலையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முழுமையாக டிஜிடல் மயப்படுத்தியுள்ளார். ஆரம்பப் பிரிவை மாத்திரம் கொண்ட இப்பாடசாலையின் 17 வகுப்பறைகளும் திறன் வகுப்பறைகளாக (ளுஅயசவ ஊடயளள) மாற்றம் பெற்றுள்ளன. ஆசிரியர்கள் அனைவரும் மடிக்கணனியை பயன்படுத்துகின்றனர். ஒரு முப்பரிமாண அச்சுப் பிரதி (3னு "சவைெநச) பயன்படுத்தப்படுகிறது. மாணவர்கள் டெப்களைப் (வுயடிள) பயன்படுத்துகின்றனர். மெய்நிகர் வகுப்றை (ஏசு ஊடயளளசழழஅ) ஒன்றை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவர் கல்வி அமைச்சின் சிறந்த அதிபருக்கான விருதை இரு முறை வென்றுள்ளார்.

இவ்வாறு பல்வேறு புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்திய திரு நல்லையா அமிர்தநாதன் அவர்களுடைய அனுபவப் பகிர்வு பாடசாலைக்குத் தேவையான வளங்களை பல்வேறு தரப்புக்களோடு இணைந்து எவ்வாறு பெற்றுக் கொள்வது,அதனை ஒழுங்கு முறையாக மற்றும் சட்ட திட்டங்களைப் பேணி எவ்வாறு பாடசாலைக்கு கொண்டு வருவது என்பது தொடர்பாக ஒரு அருமையான விளக்கத்தை வழங்கியது.

## அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

**(இப்னு தவ்பீக் ஆலீம்)**

**எழுத்தாளர்களை பெறாவிட்டால்..!**

"அன்றி, நீங்கள் பிரயாணத்தில் இருந்து (அது சமயம் கொடுக்கல் வாங்கல் செய்ய அவசியம் ஏற்பட்டு) எழுத்தாளரையும் நீங்கள் பெறாவிட்டால் (கடன் பத்திரத்திற்கு பதிலாக) அடமானமாக (ஏதேனும் ஒரு பொருளை) பெற்றுக்கொள்ளுங்கள். (இதில்) உங்களில் ஒருவர் (ஈடின்றி கடன் கொடுக்கவோ, விலை உயர்ந்த பொருட்களை சொற்பத்தொகைக்கு அடமானமாக வைக்கவோ) ஒருவரை நம்பினால் நம்பப்பட்டவர் தன்னிடம் இருக்கும் அடமானத்தை (ஒழுங்காக)க் கொடுத்து விடவும். மேலும் தன்னுடைய இறைவனாகிய அல்லாஹ்வுக்கு (மிகவும்) பயந்து (நீதமாக நடந்து) கொள்ளவும். தவிர, (அடமானத்தை எவரேனும் மோசம் செய்ய கருதினால் உங்களுடைய) சாட்சியத்தை நீங்கள் மறைக்க வேண்டாம். எவரேனும் அதனை மறைத்தால் அவருடைய உள்ளம் நிச்சயமாக பாவத்துக்குள்ளாகின்றது. (மனிதர்களே!) நீங்கள் செய்யும் அனைத்தையும் அல்லாஹ் நன்கறிந்தவன்." (2:283)

**தூதரையும் நபிமார்களையும் நம்பிக்கை கொள்ளல்**

"(மனிதர்களே! நம்முடைய) தூதர் தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பட்ட வேதத்தை மெய்யாகவே நம்பிக்கை கொள்கிறார். (அவ்வாறே மற்ற) நம்பிக்கையாளர்களும் (நம்பிக்கை கொள்கின்றனர். இவர்கள்) அனைவரும் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் நம்பிக்கை கொள்கின்றனர். தவிர, அவனுடைய தூதர்களில் எவரையும் (தூதர் அல்லவென்று) நாங்கள் பிரித்து (நிராகரித்து) விட மாட்டோம் என்றும், "(இறைவனே! உன் வேத வசனங்களை) நாங்கள் செவியுற்றோம். (உன் கட்டளைக்கு) நாங்கள் வழிபட்டோம். எங்கள் இறைவனே! நாங்கள் உன்னிடத்தில் மன்னிப்பை கோருகின்றோம். உன்னிடமே தான் நாங்கள் சேர வேண்டியுமிருக்கிறது என்று கூறுகிறார்கள்." (2:285)

**எந்த ஒரு ஆத்மாவையும் சக்திக்கு மேல் நிர்ப்பந்திப்பதில்லை**

"அல்லாஹ் யாதொரு ஆத்மாவையும் அதன் சக்திக்கு மேல் நிர்ப்பந்திப்பதில்லை. அவை தேடிக்கொண்ட நன்மை அவைகளுக்கே (பயனளிக்கும்.) அவை தேடிக்கொண்ட தீமை அவைகளுக்கே (கேடு விளைவிக்கும்.) எங்கள் இறைவனே! நாங்கள் (எங்கள் கடமைகளை செய்ய) மறந்துவிட்டாலும் அல்லது அதில் தவறிழைத்து விட்டாலும், அதைப்பற்றி நீ எங்களை (குற்றம்) பிடிக்காதே! எங்கள் இறைவனே! நீ எங்கள் மீது (கடினமான கட்டளைகளை) விதித்து வலுவான சுமையை சுமத்தி விடாதே! எங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது (கடினமான கட்டளைகளை) நீ சுமத்தியவாறு (சுமத்தி விடாதே!) எங்கள் இறைவனே! நாங்கள் தாங்க முடியாத கட்டளைகளை எங்கள் மீது சுமத்தி விடாதே! எங்கள் குற்றங்களை அழித்து விடுவாயாக! எங்களை மன்னிப்பாயாக! எங்கள் மீது கருணை புரிவாயாக! நீ தான் எங்கள் பாதுகாவலன். ஆகவே, (உன்னை) நிராகரிக்கும் கூட்டங்கள் மீது வெற்றி பெற நீ எங்களுக்கு உதவி புரிவாயாக." (2:286)



# பங்களாதேஷ் அரசியல் குழப்பம்...

# அடைக்கலம் தேடும் ஷேக் ஹசீனா....



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist,
Chennai -
Tamilnadu, India)

பாகிஸ்தானின் கிழக்கு பகுதியில் பெரும்பான்மையானவர்கள் பெங்காலி மொழி தான் பேசுவார்கள். 1949 ல் உருது மொழி மட்டுமே பாகிஸ்தானின் ஒரே தேசிய மொழியாக அறிவிக்கப்பட்டது. முஹம்மது அலி ஜின்னா கிழக்கு வங்கத்தில் இருக்கும் மக்களும் உருதுவையே தங்கள் தேசிய மொழியாக ஏற்க வேண்டும் என்று அறிவித்தார். இதற்கு கிழக்கு பாகிஸ்தானில் கடுமையான எதிர்ப்புகள் கிளம்பின. அந்த அதிருப்தியை ஒருங்கிணைத்து முஜிபுர் ரஹ்மான் பெரும் போராட்டங்களை முன்னெடுத்தார். இதையடுத்து அவர் கைதுசெய்யப்பட்டார். தன்னை விடுதலை செய்ய வேண்டும் எனக் கூறி சிறையில் உண்ணாவிரதம் இருந்தார். வெளியிலும் மக்கள் கிளர்ச்சி வெடித்தது. இதையடுத்து முஜிபுர் ரஹ்மான் விடுதலை செய்யப்பட்டார். அந்த நேரத்தில் முஸ்லீம் லீக் கட்சியிலிருந்து விலகி அவாமி லீக் கட்சியில் இணைந்தார்.

இந்தச் சூழலில்தான் கடந்த 1956-ம் ஆண்டு கிழக்கு வங்கம், கிழக்கு பாகிஸ்தான் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அப்போது "வங்க மொழியை அதிகாரபூர்வ மொழியாக அறிவிக்க வேண்டும்" என முஜிபுர் அவாமி லீக் கட்சி தோல்வியடைந்தாலும், 1996-ல் நடந்த தேர்தலில் வெற்றி பெற்றது. இதன் மூலம் வங்கதேசத்தின் பிரதமராக முதல்முறையாக பொறுப்பேற்றார் ஷேக் ஹசீனா. அப்போது முதல் 15 ஆண்டுக்காலம் அசைக்க முடியாத தலைவராக இருந்து வந்தார். இந்தச் சூழலில்தான் மாணவர் போராட்டத்தால் ஹசீனாவின் ஆட்சி முடிவுக்கு வந்திருக்கிறது.

ஆனால் பதவியில் இருக்கும் வரையில் இந்தியாவுடன் நட்பை பேணி வந்தார். சமீபத்தில்கூட வங்கதேசத்துடன் எல்லையை பகிர்ந்துகொள்ளும் இந்தியாவின் ஏழு வடகிழக்கு மாநிலங்களுக்கு சரக்குகளை கொண்டு செல்வதற்கான அனுமதியை இந்தியாவுக்குக் கொடுத்தார். மேலும் வங்கதேச இந்திய எதிர்ப்பு போராட்டக் குழுக்களை ஹசீனா கட்டுப்படுத்தினார். ஆனால் அந்த நாட்டில் ஹசீனாவின் செல்வாக்கு குறைந்த பிறகு, இந்தியாவுக்கு எதிரான குரலும் வலுவாகியிருக்கிறது. இது வங்கதேசத்தில் என்னவெல்லாம் நடக்கப்போகிறது?, இந்தியா, சீனாவில் என்ன மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது என்பதையெல்லாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

1975-ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ம்தேதி அப்போதைய வங்கதேச அதிபர் முஜிபுர் ரகுமானுக்கு எதிராகசில ராணுவ தளபதிகள் சதி செய்தனர்.தலை நகர் டாக்காவில் உள்ள அதிபரின் வீட்டில் நுழைந்த ராணுவ தளபதிகள், அதிபர் முஜிபுர் ரகுமானை சுட்டுக் இட ஒதுக்கீடுகளை ரத்து செய்ய வேண்டும் என்பதே போராட்டக்காரர்களின் மிகவும் முக்கியமான கோரிக்கையாக இருந்தது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

நீதிமன்றத்தின் இந்த உத்தரவை எதிர்த்து 6 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் அமைதி போராட்டத்தை அறிவித்தனர். மாணவர் போராட்டத்திற்கு ஷேக் ஹசீனா அனுமதி வழங்காத நிலையிலும், நாடு முழுவதும் போராட்டம் வேகமெடுத்தது. போராட்டத்தை ஒடுக்க நினைத்த காவல்துறையினருக்கும் மாணவர்களுக்கும் இடையே ஆங்காங்கே மோதல் ஏற்பட்டது. இதுவரையில் இந்த போராட்டத்தில் 300 மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தங்கள் கோரிக்கைக்கு அரசு செவி சாய்க்காததால், மாணவர்கள் ரயில் மற்றும் சாலை மறியலில் ஈடுப்பட்டனர். இதனால் டாக்கா உள்ளிட்ட முக்கிய நகரங்களில் போக்குவரத்து முடங்கியது. போராட்டக்காரர்களை அழைத்துப் பேசாமல், அவர்களை பயங்கரவாதிகள் என அழைத்தார் ஷேக் ஹசீனா. மேலும் பயங்கரவாதிகள் ஒடுக்கப்படுவார்கள் என எச்சரிக்கையும் விடுத்தார். நாடு முழுவதும் வன்முறையும் கலவரமும் தீவிரமடைய, டாக்கா பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியது காவல்துறை.இதில், போராட்டத்தை முன்னெடுத்த 6 மாணவர் தலைவர்கள் கொல்லப்பட்டனர். இதனால் ஏற்பட்ட பதற்றத்தை தொடர்ந்து தடையை தொடர்ந்து போராட்டம் வலுபெற்றது. போராட்டங்களில் பங்கேற்ற மாணவர்கள் காவல்துறையினர் என 90 பேர் உயிரிழந்தனர். டாக்காவை நோக்கி மாணவர்கள் பேரணியாக வரத் தொடங்கினர். போராட்டம் தீவிரமடைந்தால் ஷேக் ஹசீனா பிரதமர் பதவியிலிருந்து ராஜினாமா செய்து விட்டு இந்தியாவில் தஞ்சம் புகுந்தார்

வங்கதேசத்தை ராணுவம் கைப்பற்றியுள்ளது. இடைக்கால அரசு அமைப்பது குறித்து பேசப்பட்டு வருகிறது. அங்கு ஏற்பட்டுள்ள குழப்பங்கள், ஆட்சி மாற்றம் ஆகியவை இந்தியாவிற்கு நேரடியாக பல தாக்கங்களை ஏற்படுத்தும்.

அரசியல், பொருளாதாரம், வர்த்தகம், இரு தரப்பு உறவு, தேசிய பாதுகாப்பு என, பல விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. நட்பு நாடுபிரிவினைக்கு முன் பாகிஸ்தான், வங்கதேசம் ஆகியவை நம் நாட்டின் ஒரு பகுதியாக இருந்தன. பிரிவினையின்போது பாகிஸ்தான் தனி நாடாகச் சென்றது. அப்போது, அதனுடன் ஒட்டிக் கொண்டது தற்போதைய வங்கதேசம்.கிழக்கு பாகிஸ்தான் என்று அது அழைக்கப்பட்டு வந்தது.

பாகிஸ்தானுடன் ஏற்பட்ட முட்டல் மோதலில், தனி நாடாக பிரிந்து சென்றது. இதற்காக, 1971ல் நடந்த போரில், கிழக்கு பாகிஸ்தானுக்கு இந்தியா பெரும் உதவி புரிந்தது. இதன்படியே, வங்கதேசம் தனி நாடாக உருவானது.நம் நாட்டுடன் ஒட்டியுள்ள வங்கதேசத்துடன், கடந்த 15 ஆண்டுகளாக நல்ல நட்பு இருந்து வந்தது. வங்கதேசம் நிலைமையை வைத்து, அதற்கு உதவிகள் செய்வதுபோல், தன் ஆதிக்கத்தை நடத்துவதற்கு சீனா துடித்துக் கொண்டிருக்கிறது. அவ்வாறு சீனாவுக்கு ஆதரவாக வங்கதேசம் சென்றால், இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பல முக்கிய துறைகளில் பெரும் சவால்களை ஏற்படுத்தும்.குறிப்பாக, பொருளாதாரத்திலும், வர்த்தக உறவிலும் பாதிப்புகள் ஏற்படலாம். இந்தியாவின் ஏற்றுமதியில், ஐந்து முக்கிய நாடுகளில் வங்கதேசமும் ஒன்று. இதில் பாதிப்பு ஏற்படும் அச்சம் உள்ளது. அதுபோல, இரு நாட்டுக்கும் இடையே உள்ள தாராள வர்த்தக ஒப்பந்தமும் ரத்து செய்யப்படலாம், அதற்கு முட்டுக்கட்டை போடப்படலாம்.

இந்திய பெருங்கடல் உலகின் 3-வது பெரிய கடல் ஆகும். சர்வதேச கச்சா எண்ணெய் வர்த்தகத்தில் 80மூ, சர்வதேச சரக்கு வர்த்தகத்தில் 40மூ இந்த கடல் பிராந்தியம் வழியாக நடைபெறுகிறது. தற்போது இப்பகுதியில் இந்தியா கோலோச்சி வருகிறது.

இதற்கு சவாலாக "ஒரே சாலை, ஒரே மண்டலம்" திட்டத்தின் கீழ் இந்தியாவின் அண்டை நாடுகளை தனது நட்பு நாடுகளாக மாற்ற சீனா முயற்சி செய்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக வங்கதேசத்தின் துறைமுகங்கள் மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்களில் சீனாபெருமளவு முதலீடு செய்திருக்கிறது. எனினும் அந்த நாட்டின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா இந்தியாவுக்கே முதலிடம் அளித்து வந்தார்.



ரஹ்மான் வலியுறுத்தினார். பிறகு 1958-ம் ஆண்டில் அரசியல் அமைப்பை ரத்து செய்துவிட்டு ராணுவ ஆட்சியை ஜெனரல் அயுப் கான் கொண்டு வந்தார். இதை எதிர்த்து மீண்டும் முஜிபுர் போராட்டம் நடத்தினார். இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டு 1961 வரை சிறையில் அடைக்கப்பட்டார். சிறையிலிருந்து வெளியில் வந்தவர் வங்க மக்களுக்காக போராடினார். இதையடுத்து வங்காளிகளால் வங்கபந்து (வங்காளிகளின் நண்பர்) என அழைக்கப்பட்டார்.

இதையடுத்து 1970-ல் நடைபெற்ற பாகிஸ்தான் பொதுத் தேர்தல்களில் முஜிபுர் ரஹ்மான் தலைமையிலான அவாமி லீக் கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற்று வென்றது. ஆனால் பாகிஸ்தான் ராணுவமும், இஸ்லாமிய அரசியல் கட்சிகளும் முஜிபுர் ரஹ்மான் பாகிஸ்தான் பிரதமராக வருவதை எதிர்த்தனர். மேலும் பூட்டோவுடன் இணைந்து கூட்டணி அரசு அமைக்கலாம் என முடிவு செய்தனர். அதன்படி பூட்டோ ஜனாதிபதியாகவும் முஜிபுர் பிரதமராகவும் பதவியேற்க முடிவு செய்தார்கள். ஆனால், அப்போதைய ஜனாதிபதி யாஹியா கான் அரசு அமைவதைத் தள்ளிப்போட்டார். மேலும் ராணுவச் சட்டத்தைக் கொண்டு வந்தார். அதோடு நிறுத்திக் கொள்ளாமல் அவாமி லீக் கட்சியை தடைசெய்தார். மேலும் முஜிபுர் கைதும்செய்யப்பட்டார். இதனால் மீண்டும் புரட்சி வெடித்தது. அப்போது ஏற்பட்ட கலவரத்தில் ஏராளமான மக்கள் கொல்லப்பட்டனர். மேலும் முஜிபுர் கைது செய்யப்பட்டு பாகிஸ்தான் கொண்டு செல்லப

அப்போதுதான் முக்தி வாஹினி படை உருவானது. மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். இந்திய ராணுவம் சம்பந்தப்பட்ட மக்களுக்கு உதவ முன்வந்தது. இந்திய ராணுவத்தின் உதவியுடன் முக்தி வாஹினி படை பாகிஸ்தான் ராணுவத்தினருடன் போரிட்டது. இறுதியில் பாகிஸ்தான் ராணுவம் சரணடைந்தது. இதையடுத்து வங்க தேசம் உருவானது. முஜிபுர் அதன் முதல் பிரதமரானார். ஆனால் ராணுவத்தினர் செய்த சதியினால் 1975-ல் வெளியூரில் படித்துக்கொண்டிருந்த இரு மகள்கள் தவிர குடும்ப உறுப்பினர்கள் படுகொலைசெய்யப்பட்டனர். பிறகு 1975-ம் ஆண்டில் முஜிபுர் கொல்லப்பட்டார்.

ஆனால் ஜெர்மனியில் இருந்ததால் மகள்களான ஷேக் ஹசீனாவும், அவரது சகோதரி ஷேக் ரெஹானாவும் மட்டுமே உயிர் பிழைத்தனர். 1981-ல் வங்கதேசம் திரும்பிய ஷேக் ஹசீனா, மக்களாட்சி மலர்வதற்காக நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். 1991-ல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஷேக் ஹசீனாவின் கொன்றனர். அவரது மனைவி, 3 மகன்கள், 2 மருமகள்கள் மற்றும் உறவினர்கள், பாதுகாவலர்கள் அனைவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த படுகொலையில் முஜிபுர் ரகுமானின் மூத்த மகள் ஷேக் ஹசீனாவும் அவரது தங்கை ரெகானாவும் உயிர் தப்பினர். அப்போது ஹசீனாவின் கணவர் வாஸத் மியா ஜெர்மனியில் வசித்து வந்தார். வங்கதேசத்தில் இருந்து ஹசீனாவும் ரெகானாவும் ஜெர்மனிக்கு தப்பிச் சென்றனர். அங்கேயும் அவர்களது உயிருக்கு அச்சுறுத்தல் நீடித்தது.

அந்த இக்கட்டான நேரத்தில் அப்போதைய இந்திய பிரதமர் இந்திரா காந்தி, ஹசீனாவுக்கு அடைக்கலம் அளித்தார். ஜெர்மனியில் இருந்து டெல்லி வந்த ஹசீனா குடும்பத்தினர் அங்குள்ள பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டனர். ஹசீனாவோடு அவரது மகன், மகளும் டெல்லியில் தங்கியிருந்தனர்.

இந்திரா காந்தியின் குடும்பம், வங்கதேசத்தை சேர்ந்த பிரணாப் முகர்ஜியின் குடும்பத்தோடு ஹசீனா நெருங்கி பழகினார். பிரணாப்முகர்ஜியின் குடும்ப உறுப்பினர்களில் ஒருவராகவே அவர் பாவிக்கப்பட்டார்.சுமார் 6 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த 1981-ம் ஆண்டு மே 17-ம் தேதி ஹசீனா மீண்டும் வங்கதேசம் சென்றார். அவாமி லீக் கட்சியின் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு கடந்த 2009-ம் ஆண்டில் வங்கதேச பிரதமராக பதவியேற்றார். தொடர்ந்து 15ஆண்டு வங்கதேசத்தை ஆட்சிசெய்த அவருக்கு எதிராக தற்போது கலவரம் வெடித்துள்ளது. இதன் காரணமாக அவர் மீண்டும் இந்தியாவில் தஞ்சமடைந் துள்ளார்.

வங்கதேசத்தில் ஆட்சி அதிகாரத்தில் இருந்த ஷேக் ஹசீனா, நாட்டை விட்டு தப்பியோடும் நிலைக்கு தள்ளப்பட்டது எதனால். அவர் 4ஆவது முறை பதவியேற்றதிலிருந்து நடந்தது என்ன என்பதை தெரிந்து கொள்ளலாம்.

எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பு, தேர்தல் முறைகேடு என பல சர்ச்சைகளுக்கு இடையே கடந்த ஜனவரி மாதம் 4-வது முறையாக வங்கதேசத்தின் பிரதமராக பதவியேற்றார் ஷேக் ஹசீனா. 5 மாதங்கள் கடந்த பின்னர், குடிமைப் பணிகளில், சுதந்திர போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு மீண்டும் 30 சதவிகித இடஒதுக்கீடு வழங்க டாக்கா நீதிமன்றம் அனுமதி அளித்தது. மாணவர்கள் போராட்டத்தின் மிகவும் முக்கியமான காரணியாக இருந்தது இட ஒதுக்கீடு வடிவம் தான். 1971 ம் ஆண்டு பங்களாதேஷ் விடுதலை பெற முயற்சி செய்த போது போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட 30 சதவீதம்

கல்வி நிறுவனங்கள் காலவரம்பின்றி மூடப்பட்டன. கொல்லப்பட்ட மாணவர்கள் நினைவாக அனைத்துப் பல்கலைகழக மாணவர்கள் நடத்திய பேரணியிலும் வன்முறை வெடித்தது. இதனை தொடர்ந்து நாடு தழுவிய போராட்டத்திற்கு மாணவர் அமைப்பினர் அழைப்பு விடுத்தனர்.

மாணவர்களை சமாதானப்படுத்தும் விதமாக நீதி விசாரணைக்கு உத்தரவிட்டார் ஷேக் ஹசீனா. அமைதிக்கு திரும்பும் படி ஹசீனா விடுத்த அழைப்பை நிராகரித்த மாணவர்கள், சர்வாதிகாரி ஒழிக என்ற முழக்கத்தை நாடு முழுவதும் பரப்பினர். எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் விதமாக காவல்துறையினரின் தாக்குதலில் 19 பேர் பலியாகினர். அதிகரிக்கும் வன்முறையை ஒடுக்கும் விதமாக நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இணைய சேவைக்கு தடை விதிக்கப்பட்டது. போராட்டக்காரர்களை கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஊரடங்கு உத்தரவை ஒது பொருட்டாகவே மதிக்காத மாணவர்கள் தடையை மீறி போராட்டம் நடத்தினர். அரசு உத்தரவை மீறியதால் இரண்டாயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். இதற்கு இடையே கலவரத்திற்கு காரணமான டாக்கா உயர்நீதிமன்ற உத்தரவுக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்தது. எனினும் சுதந்திர போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு அளிக்கப்படும் இடஒதுக்கீட்டை மொத்தமாக ரத்து செய்ய வலியுறுத்தி மாணவர்கள் போராட்டத்தை தொடர்ந்தனர்.

மாணவர் போராட்டங்களை வங்கதேச தேசிய கட்சி தூண்டுவதாக குற்றச்சாட்டிய ஹசீனா, கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார். பெரும் புரட்சியாக மாறிக்கொண்டிருந்த போராட்டத்தை சற்றேனும் தளர்த்த நினைத்த ஹசீனா அரசு இடஒதுக்கீட்டை சீர்திருத்தி அரசாணை வெளியிட்டார். ஆனால் இதையும் நிராகரித்து போராட்டத்தை தொடர்ந்தனர் மாணவர்கள்.

இதனையடுத்து அதிரடியாக சோதனைகளை மேற்கொண்ட பாதுகாப்பு துறை ஏராளமான மாணவ தலைவர்களை கைது செய்தது. பின்னர் பலதரப்பினரின் கோரிக்கையை ஏற்று இணைய சேவைக்கு விதித்த தடையை நீக்கியது அரசு எனினும் வாட்ஸ் அப், எக்ஸ் உள்ளிட்ட சமூக வலைதளங்களுக்கு தடை தொடரும் என அறிவித்தது. மாணவர் போராட்டத்தை தொடங்கியதாக கூறி ஜமாத் ஷிபீர் என்ற மாணவ அமைப்புக்கு, தீவரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடைவிதித்தார் ஷேக் ஹசீனா.

உருவாவதற்கு காரணமான வங்கத் தந்தை என்றழைக்கப்படும் ஷேக் முஜிபுர் ரஹ்மான், இந்தியாவுடன் நல்ல நட்பு வைத்திருந்தார்.

அவரது மகளான ஷேக் ஹசீனா, 2009ல் இருந்து தொடர்ந்து நான்கு முறை பிரதமரானார். தந்தை வழியில் அவரும் இந்தியாவுடனான நட்பைத் தொடர்ந்தார். பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான, கடந்த 10 ஆண்டுகால ஆட்சியில், இரு தரப்பு உறவு சிறப்பாகவே இருந்தது. ஷேக் ஹசீனாவை தன் சகோதரி என்று அவர் அன்பு பாராட்டினார். இருவருக்கும் இடையேயான அந்த நல்ல நட்பு, பாசப்பிணைப்பு, இரு நாடுகளுக்கும் இடையே நல்ல உறவை வளர்த்து வந்தது.

இதனால், வங்கதேசத்தில் உள்ள எதிர்க்கட்சிகள் பற்றி இந்திய அரசு பெரிதும் கவலைப்படாமல் இருந்தது. தற்போது, ஷேக் ஹசீனா இல்லாத நிலையில், ஆட்சியில் அமரப் போவது யார், நிர்வாகத்தை கவனிக்கப் போவது யார் என்பது இந்திய அரசுக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது. முக்கியமான, பி.என்.பி., எனப்படும் வங்கதேச தேசியவாத கட்சி, எப்போதும் இந்தியா எதிர்ப்பாளராகவே இருந்துள்ளது. அத்துடன், அது தீவிர இஸ்லாமிய மத அமைப்பான, ஜமாத் – இ – இஸ்லாமி கட்சியுடன் கூட்டணி வைத்துள்ளது.இந்த அமைப்பு இந்தியாவுக்கு எதிரான மதத் தீவிரவாதத்தை வளர்த்து வந்தது.மேலும், ஒரு காலத்தில் "உல்பா" போன்ற தீவிர எண்ணம் கொண்ட தீவிரவாத அமைப்புகள் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் செயல்பட்டு வந்தன.இந்த பயங்கரவாத அமைப்புகளுக்கு, வங்கதேசம் தஞ்சமும், ஆதரவும் அளித்து வந்தது.

ஷேக் ஹசீனா அதை ஒடுக்கினார். சவால்இதனால், இந்திய தீவிரவாத அமைப்பான உல்பா போன்ற பிரிவினைவாத அமைப்புகள், வங்கதேசத்தின் மதத் தீவிரவாத அமைப்பான ஜமாத் – இ – இஸ்லாமி ஆகியவை மீண்டும் தலைதூக்கும் அபாயம் உள்ளது என்பதே இந்தியாவின் கவலையாக உள்ளது. இது போன்ற நிகழ்வுகள் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களிலும், வங்கதேச எல்லையிலும் பெரும் பாதுகாப்பு சவால்களை உருவாக்கும். புதிதாக உருவாக உள்ள இடைக்கால அரசில் யார் யார் இணைய உள்ளனர் என்பதே, இரு தரப்பு உறவுகளை நிச்சயிக்கும் நிலை உருவாகியுள்ளது. அங்கு இந்திய எதிர்ப்பாளர்கள் இருப்பதுடன், மதத் தீவிரவாத அமைப்புகளும் உள்ளன.

அதுபோல, சீன ஆதரவாளர்களும் உள்ளனர்.வங்கதேசத்தின் பொருளாதார

இதன்காரணமாக வங்கதேச வர்த்தகத்தில் இந்தியாவின் கை ஓங்கி இருந்தது. சுமார் 350-க்கும் மேற்பட்ட இந்திய நிறுவனங்கள் வங்கதேசத்தில் செயல்பட்டு வருகின்றன. 19,000-க்கும் மேற்பட்ட இந்தியர்கள் அந்த நாட்டில் பணியாற்றி வருகின்றனர்.

ஷேக் ஹசீனா அண்மையில் கூறும்போது, "வங்கதேசத்தின் தீஸ்தா நதி மேம்பாட்டு திட்டத்தை செயல்படுத்த சீனா மிகவும் ஆர்வமாக உள்ளது. எனினும் இந்த திட்டப்பணி இந்தியாவிடம் ஒப்படைக்கப்படும்" என்று தெரிவித்தார்.

தொடர்ந்து இந்தியாவுக்கு ஆதரவாக செயல்படும் ஷேக் ஹசீனா ஆட்சியை கவிழ்க்க சீனா முடிவு செய்தது. இதற்காக பாகிஸ்தானின் ஐஎஸ்ஐ உளவு அமைப்புடன் அந்த நாடு ரகசியமாக கைகோத்தது. வங்கதேசத்தில் ஐஎஸ்ஐ உளவாளிகள் ஊடுருவிகலவரத்தை தூண்ட, அதற்கு தேவையான நிதியை சீனா தாராளமாக அள்ளிக் கொடுத்திருக்கிறது.

இதுகுறித்து இந்திய உளவுத் துறை வட்டாரங்கள் கூறும் போது வங்கதேசத்தில் ஜமாத் – இ – இஸ்லாமி என்ற பழமைவாத அமைப்பு செயல்படுகிறது. இதன் மாணவர் பிரிவான இஸ்லாமி சத்ரஷிபிரை சேர்ந்த மாணவர்களுக்கு பாகிஸ்தானின் ஐஎஸ்ஐ அமைப்பு கடந்த சில ஆண்டுகளாக சிறப்பு பயிற்சிகளை வழங்கியது. பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் உள்ள முகாம்களில் இவர்களுக்கு ஆயுத பயிற்சி அளிக்கப்பட்டது.

பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ அமைப்பால் கொம்பு சீவி வளர்க்கப்பட்ட இவர்கள், வங்கதேச மாணவர் சங்க போராட்டத்தை கலவரமாக மாற்றி, பெரும் உயிரிழப்பை ஏற்படுத்தி உள்ளனர். இதற்காக ஐஎஸ்ஐ அமைப்புக்கு சீனா பெரும் தொகையை வழங்கியிருக்கிறது.

வங்கதேசத்தின் பிரதான எதிர்க்கட்சியான பிஎன்பி-யின் தலைவர் தாரிக் ரகுமான், பிரிட்டன் தலைநகர் லண்டனில் வசிக்கிறார். இவரும் ஐஎஸ்ஐ உளவு அமைப்பின் மூத்த தலைவர் ஜாவித்தும் அண்மையில் சவுதி அரேபியாவின் ஜெட்டா நகரில் சந்தித்தனர். அப்போது ஷேக் ஹசீனா ஆட்சியை கவிழ்க்க சதித் திட்டம் தீட்டப்பட்டதாகவும் இந்திய தேசிய நாளேடுகள் மிகப் பெரிய அளவில் ஆன கட்டுரைகளை வெளியிட்டுள்ளது.

பிஎன்பி தலைவர் தாரிக் ரகுமானுக்கும்

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...

6ம் பக்கத் தொடர்ச்சி...

மும்பை நிழல்உலக தாதா தாவூத் இப்ராகிமுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. துபாயில் உள்ள தாவூத்தின் சொத்துகளை தாரிக் ரகுமான் வாங்கி உள்ளார்.வங்கதேசத்தின் சிட்டகாங்கில் அண்மையில் 10 லாரிகளில் கொண்டு செல்லப்பட்ட துப்பாக்கிகள், வெடிகுண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த ஆயுதங்கள் இஸ்லாமி சத்ரஷிபிர் அமைப்பை சேர்ந்த மாணவர்களுக்கு அனுப்பப்பட்டவை ஆகும்.

இதன் பின்னணியில் தாரிக் ரகுமானும் தாவூத் இப்ராஹிமும் உள்ளனர். ஆப்கானிஸ்தானின் தலிபான்கள் ஆட்சி போன்று வங்கதேசத்தில் முஸ்லிம் பழமைவாத ஆட்சியை ஏற்படுத்த பாகிஸ்தானின் ஐஎஸ்ஐ அமைப்பு தீவிர முயற்சி செய்து வருவதாக இந்திய உளவுத்துறையின் கருத்துக்களை மேற்கோள் காட்டி இந்திய பத்ரிகைகள் செய்தி வெளியாகியுள்ளது.

இந்த பதவி விலகல் மற்றும் அவரை நாட்டை வெளியேற்றியதன் பின்னணியில் பாகிஸ்தான் நாட்டின் ஐஎஸ்ஐ எனும் உளவு அமைப்பு இருப்பது தெரியவந்துள்ளது. அது எப்படி சாத்தியமானது?

பாகிஸ்தானில் இருந்து தான் வங்கதேசம் புதிய நாடாக பிறந்தது. இதனால் பாகிஸ்தானுக்கும், வங்கதேசத்துக்கும் இடையே எப்போதுமே மோதல் போக்கு என்பது இருந்து வருகிறது. மேலும் வங்கதேசத்தில் பாகிஸ்தானுக்கு ஆதரவுடன் செயல்படும் அமைப்புகள் உள்ளன.

அதில் ஒன்று தான் ஜமாத்–இ–இஸ்லாமி என்பதாகும். இதன் மாணவர் பிரிவின் பெயர் ஐசிஎஸ் எனும் இஸ்லாமிய சத்ரா ஷிபிர். இந்தஅமைப்பை சேர்ந்தவர்கள் தான் கடந்த ஜுன் மாதத்தில் இருந்தே வங்கதேசம் தனி நாடாக உருவாக போராடிய தியாகிகளின் வாரிசுகளுக்கு இடஒதுக்கீடு வழங்க எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும் போராட்டம் நடத்தி வந்தது.இந்த ஜமாத் இ – இஸ்லாமி மற்றும் இஸ்லாமிய சத்ரா ஷிபிர் ஆகிய அமைப்புக்கு பாகிஸ்தான் நாட்டின் அதிகாரப்பூர்வ உளவு அமைப்பான ஐஎஸ்ஐயின் ஆதரவு உள்ளது. இந்திய ரோ" உள்ளிட்ட உளவு அமைப்பு போன்று பாகிஸ்தானில் ஐஎஸ்ஐ என்பது அதிகாரப்பூர்வ அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

ஷேக் ஹசீனா தொடர்ந்து இந்திய நாட்டுக்கு ஆதரவாக உள்ளார். இது பாகிஸ்தானுக்கு பிடிக்கவில்லை. அதேவேளையில் பாகிஸ்தான் ஆதரவு பெற்ற கட்சிகளின் தலைவர்களை ஷேக் ஹசீனா சிறையில் அடைத்தார். குறிப்பாக சிறையில் அடைக்கப்பட்ட முக்கிய தலைவர் ஒருவர் யார் என்றால் பிஎன்பி எனும் வங்கதேச தேசியவாத கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான கலிதா ஜியா. இவர் பாகிஸ்தான் ஆதரவு நிலைப்பாட்டை கொண்டவர். இவரை ஊழல் வழக்கில் ஷேக் ஹசீனா சிறையில்

அடைத்தார். அதேபோல் அவரது கட்சிகளை சேர்ந்த பலரும் சிறையில் உள்ளனர்.இதனால் பாகிஸ்தான் தனது ஆதரவு பெற்ற அதேவேளையில் சிறையில் உள்ள முன்னாள் பிரதமர் கலிதா ஜியா ஆதரவாக செயல்பட்டு வரும் ஜமாத் இ இஸ்லாமி மற்றும் அதன் மாணவர் பிரிவான இஸ்லாமிய சத்ரா ஷிபிர் மூலம் குழப்பத்தை ஏற்படுத்த திட்டமிட்டது. இதற்காக கடந்த 2 ஆண்டுகளில் இஸ்லாமிய சத்ரா ஷிபிர் பிரிவை சேர்ந்தவர்கள் அந்த நாட்டின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் சேர்ந்தனர்.

குறிப்பாக டாக்கா பல்கலைக்கழகம், சிட்டகாங் பல்கலைக்கழகம், ஜஹாங்கீர்

பல்கலைக்கழகம், சில்ஹெட் பல்கலைக்கழகம் மற்றும் ராஜ்ஷாஹி பல்கலைக்கழகம் உள்ளிட்டவற்றில் இவர்கள் அதிகளவில் சேர்ந்துள்ளனர். அதுமட்டுமின்றி அந்த பல்கலைக்கழகங்களில் நடந்த மாணவர் அமைப்பு தேர்தல்களில் அவர்களே வெற்றியும் பெற்றுள்ளனர். இதனால் அவர்கள் மிகவும் வலுவாக காலுன்றியுள்ளனர்.

தற்போது இவர்கள் தான் இடஒதுக்கீட்டுக்கு எதிரான போராட்டத்தை தொடங்கி தொடர்ந்து வீரியமாக்கினர். மேலும் நேற்று முன்தினம் நடந்த மோதலில் ஒரே நாளில் 110 பேர் வரை கொலை செய்யப்பட்டனர். இதையடுத்து அவர்கள் போராட்டத்தை தீவிரமாக்கி ஷேக் ஹசீனாவை ராஜினாமா செய்ய வைத்துள்ளனர். அதுமட்டுமின்றி மாணவர் அமைப்பு மட்டுமின்றி ஜமாத், மதராஸ் சார்ந்த சில நிர்வாகிகளும் பாகிஸ்தான் ஐஎஸ்ஐ அமைப்புக்கு ஆதரவாக செயல்பட்டு வந்துள்ளனர். இவர்கள் மூலம் மாணவர்களுக்கு சதித்திட்ட விபரங்கள் பகிரப்பட்டுள்ளதாக திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதன்மூலம் பாகிஸ்தானில் இருந்தபடியே அந்த நாட்டின் ஐஎஸ்ஐ உளவு அமைப்பானது வங்கதேசத்தில் இடஒதுக்கீடு விவகாரம் தொடர்பான பிரச்சனையை தூ ண்டி கலவரத்தை அரங்கேற்றி ஷேக் ஹசீனாவின் பிரதமர் பதவியை ராஜினாமா செய்ய வைத்துள்ளது. அதுமட்டுமின்றி பாகிஸ்தானுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தி வங்கதேசத்தை தனிநாடாக 1971ல் அப்போதைய நம் நாட்டு பிரதமர் இந்திரா காந்தி உதவியுடன் உருவாக்கியது ஷேக் ஹசீனாவின் தந்தை ஷேக் முஜ்புர் ரஹ்மான் தான். இப்படி இருக்கும்போது பாகிஸ்தானை 2 ஆக பிரித்ததற்கு பழிவாங்கும் வகையில் 54 ஆண்டுகள் கழித்து "வங்கதேசத்தின் தேசப்பிதா" என அழைக்கப்படும் தந்தை ஷேக் முஜ்புர் ரஹ்மானின் மகள் ஷேக் ஹசீனாவையே பிரதமர் பதவியை ராஜினாமா செய்ய வைத்து சொந்த நாட்டில் இருந்து வெளியேற்றி உள்ளது பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ என்பதாக தற்போது செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த சூழ்நிலையில் ஷேக் ஹசீனா ஐரோப்பிய நாடுகளில் ஏதேனும் ஒன்றில் தஞ்சமடையலாம் என்று சொல்லப்படுகிறது. இதற்கான வேலைகளை ஷேக் ஹசீனா தொடங்கியுள்ளார். இதில் பிரிட்டனை அவர் தேர்வு செய்துள்ளார். பிரிட்டனில் அடைக்கலம் கோரிய நிலையில் அவரது கோரிக்கை நிராகரிக்கபட அதிக வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. இதனால் ஷேக் ஹசீனா தனது சகோதரி ரெஹானாவின் மகன் ரத்வான் முஜிப் சித்திக் வசிக்கும் பின்லாந்து அல்லது மகன் சஜீப் வசேத் உள்ள அமெரிக்காவில் செல்ல உள்ளதாக கூறப்படுகிறது. மேலும் ஐக்கிய அமீரகத்தில் அடைக்கலம் செல்லவும் அவர் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இத்தகைய சூழலில் தான் பலருக்கும் ஒரு கேள்வி வந்துள்ளது. அதாவது நமக்கு விசுவாசமாக செயல்பட்ட ஷேக் ஹசீனாவுக்கு நம் நாடு ஏன் தற்காலிகமாக மட்டுமே அடைக்கலம் கொடுக்கிறது? ஏன் இந்தியா அவருக்கு நிரந்தரமாக அடைக்கலம் கொடுக்க தயங்குகிறது? என்ற கேள்விகள் எழுகின்றன.

முதலாவதாக அதாவது கடந்த முறை 1975 ம் ஆண்டில் டெல்லியில் ஷேக் ஹசீனா இந்தியாவில் அடைக்கலமானபோது அவர் மீது பரிதாபம் இருந்தது. வங்கதேசத்தை உருவாக பாடுபட்ட தந்தையை இழந்த ஷேக் ஹசீனா மீது அந்நாட்டு மக்கள் பரிவு காண்பித்தனர். இதனால் இந்தியா அடைக்கலம் கொடுத்தது பாசிட்டிவ்வாக பார்க்கப்பட்டது. ஆனால் இந்த முறை அப்படி இல்லை. ஷேக் ஹசீனாவுக்கு எதிராக வங்கதேசத்தில் போராட்டம் நடத்தப்பட்டு வன்முறை அரங்கேறி உள்ளது. ஷேக் ஹசீனா மீது அந்த நாட்டு மக்கள் கடும் கோபத்தில் உள்ளனர். மேலும் சில விஷ யங்களில் அவர் சர்வாதிகார போக்கை கடைப்பிடித்ததாக கூறப்படுகிறது. இது போன்ற காரணங்களால் தற்போது ஷேக் ஹசீனாவுக்கு நிரந்தரமாக அடைக்கலம் கொடுக்க இந்தியா தயங்குகிறது.

இரண்டாவதாக, மேலும் நம் நாட்டையொட்டியே வங்கதேசம் உள்ளது. தற்போது அங்கு ஷேக் ஹசீனாவுக்கு எதிரான கொந்தளிப்பு மனநிலை இருக்கும் சூழல் நாம் அவருக்கு அடைக்கலம் கொடுத்தால் அந்த நாட்டில் போராளிகள் இந்திய எதிர்ப்பு எதிரான மனநிலையில் மாறுவதற்கு அதிகம் வாய்ப்பு உள்ளதாக இந்தியா நம்புகின்றது. இதன் மூலம் இந்தியாவுக்கு எதிரான போராட்டத்தை தொடங்கும் நிலையில் அது இந்தியாவின் கிழக்கு எல்லையில் தேவையின்றி பதற்றம் ஏற்படலாம் என இந்திய மத்திய அரசு நினைக்கிறது. ஏனென்றால் இந்தியா வங்கதேசத்துடன் 4,096 கிமீ எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது. இவ்வளவு பெரிய எல்லையில் பதற்றம் ஏற்படும் பட்சத்தில் அது பெரும் பிரச்சனையாக மாறலாம்.

மூன்றாவதாக ஷேக் ஹசீனாவுக்கு எதிராக இஸ்லாமிய குழுக்கள் ஒன்றிணைந்துள்ளன. இதில் சில குழுக்கள் பாகிஸ்தானுடன் தொடர்பு உள்ளதாக கூறப்படுகிறது. இந்த வேளையில் இந்தியா ஷேக் ஹசீனாவுக்கு அடைக்கலம் கொடுத்தால் அது இந்தியாவுக்கு தேவையில்லாத தலைவலியை ஏற்படுத்தலாம் என கூறப்படுகிறது.மேற்கண்ட 3 காரணங்களால் தான் ஷேக் ஹசீனாவுக்கு இந்தியா நீண்டகாலம் அடைக்கலம் கொடுக்க தயங்கி வருவதாக முக்கிய தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்தநிலையில், நாட்டை விட்டு தப்பி ஓடிய ஷேக் ஹசீனா இந்தியாவின் டெல்லி அல்லது இங்கிலாந்தில் லண்டனிலும் அல்லது பின்லாந்து நாட்டிலும் தஞ்சமடைய வாய்ப்பு இருப்பதாக தி டான் இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

இதனிடையே, வங்கதேச நிலவரம் தொடர்பாக டெல்லியில் இன்று நடைபெற்ற அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் பேசிய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், "ஷேக் ஹசீனாவுக்கு உதவுவதாக மத்திய அரசு உறுதியளித்துள்ளது. ஹசீனா அதிர்ச்சியில் உள்ளார். ஷேக் ஹசீனாவின் எதிர்கால திட்டங்கள் உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து அவருடன் பேசும் முன், அவர் ஆசுவாசப்படுத்திக்கொள்ள அவகாசம் அளிக்க விரும்புகிறோம். அதன்படி, எதிர்கால நடவடிக்கையை முடிவு செய்ய ஹசீனாவுக்கு அவகாசம் அளித்துள்ளோம்" என தெரிவித்தார்.

அதே சமயம் பிரித்தானிய அரசு ஷேக் ஹசீனா வை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கிடையே ஷேக் ஹசீனாவின் மகன் சஜீப் வசேத் மேலும் கூறுகையில், "புகலிடம் கோருவது குறித்து வெளியாகும் செய்திகள் தவறானவை. அவள் எங்கும் புகலிடம் கோரவில்லை. இங்கிலாந்து அல்லது அமெரிக்காவில் அவர் புகலிடத்திடம் கோரியுள்ளதாக வரும் தகவல்கள் பொய்யானவை" என்றார்.

இதற்கிடையில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் இது தொடர்பாக விளக்கமளித்துள்ளது. அதாவது ஷேக் ஹசீனாவின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து இதுவரை எந்த அறிவிப்பும் இல்லை என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. அவர் எப்போது இந்தியாவை விட்டு வெளியேறுவார் என்று கேள்விக்கு வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் இந்த பதிலை அளித்துள்ளார்.

குறிப்பாக இந்தாண்டு தொடக்கத்தில் வங்கதேசத்தில் பொதுத்தேர்தல் நடந்தது. அதில் ஹசீனாவின் அவாமி லீக் தேர்தலில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இருப்பினும், தேர்தலுக்கு முன்பாக அங்குள்ள பல பரிரான எதிர்க்கட்சி தலைவர்கள் கைது செய்யப்பட்டு இருந்ததால் அமெரிக்கா இதற்கு அதிருப்தி தெரிவித்தது.

தேர்தலில் முறைகேடுகள் குறித்த விசாரிக்க வேண்டும் என்றும் அமெரிக்கா வெளிப்படையாகவே கோரிக்கை விடுத்தது. மேலும், ஹசீனாவின் அமெரிக்க விசாவும் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் அவருக்கு அமெரிக்கா செல்வதிலும் சிக்கல் நீட்டிக்கவே செய்கிறது.

மேலும், ஆப்கானில் சிக்கல் நிலவிய போது அந்நாட்டின் அதிபர் ஐக்கிய அமீரகத்திற்குத் தான் சென்றிருந்தார். எனவே, அது குறித்தும் ஹசீனா ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது. இப்படிப் பல சிக்கல்கள் இருப்பதால் அவர் எங்குச் செல்வது என்பது குறித்து இன்னும் சில நாட்களில் தெரிய வரும் என்பதே உண்மையாகும்..!




# கல்வி அரசியலில் இருந்து விடுபடலும் ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக்காக மீட்புக்குரிய கல்விக் கோட்பாட்டை அமுலாக்கலும்

கல்வி எல்லோருக்குமானது. அது அடிப்படை மனித உரிமை. இலங்கை போன்ற நாடுகளில் கீழ்நிலை முதல் மேல் நிலை வரை இலவசக்கல்வி நீண்ட காலமாக அமுலில் இருந்தாலும் தரமான கல்வி எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. கல்வி மிகவும் கவனமாக வணிக, வர்த்தக விளம்பரமயமாக்கப்பட்டு கூறு போடப்பட்டுள்ளது. நுகர்வுப்பண்டமாக ஆக்கப்பட்டுள்ளது. ஒரு கூட்டம் கல்வியால் வெகுவாக வளர்ந்து முன்னேற இன்னொரு கூட்டம் எல்லாப்புறத்தாலும் ஒடுக்கப்பட்டு இம்சிக்கப்பட்டு கல்வியிலிருந்து நீக்கப்படுகின்றனர். ஓரங்கட்டப்படுகின்றனர்.

கல்வி தொடர்பான கீழைத்தேய மேலைத்தேய சிந்தனைகளின் பிரதிபலிப்பாகவும் எதிரொலியாகவும் தெரிப்பாகவும் அமைந்து மாற்றுசிந்தனைகளை கருத்தில் கொள்ளாது எமது நாட்டு கலாசாரம், பண்பாடு, விழுமியங்கள் என்பவற்றுக்கு ஏற்றதாக அமையாமல் எமது நாட்டின் கல்விக்கொள்கையும் கலைத்திட்டமும் பொதுப்பரீட்சைகளும் இன்னுமின்னும் கல்வியில் வாயளவிலான, வார்த்தையலவிலான சமத்துவ கல்வியைத்தான் முன்கொண்டு செல்கிறது.

கல்வியியல் ஆய்வாளர்கள் மேலைப்புல தளத்தில் நின்று கொண்டு தன்னிலைக் கருத்துக்கள், சிந்திப்புக்கள் எதுவும் அற்ற நிலையில் வெறுமை நிலையில் வேறோன்றும் செய்ய முடியாமல் திணறி அழுத்தங்களுக்கு ஆளாக்கப்பட்டு அதற்கு அகப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட சிந்தனைகளால் ஆகர்ஷிக்கப்பட்டிருப்பதானது பின்காலனியத்தின் கணிசமான பாதிப்பு என்று துணிந்து கூறிவிடலாம்.

எமது நாட்டின் புவியியல் பௌதிக கலாசார பன்மை துவங்களை மறந்து

மேலைத்தேய சிந்தனை மரபிலும் கருத்துருவாக்கத்திலும் எண்ணக்கருவாக்கங்களிலும் மேலோங்கி உயர்ந்திருப்பதானது எமக்கு, எமது நாட்டுக்கு, எமது நிலையான இருப்புக்கு உகந்ததாக அமையாமல் சுதேச இயல்பு நிலையினை தாரைவார்த்து தம்மைத்தாமே தற்றுணிவற்ற நிலைக்கு கொண்டு செல்வதுடன் நமது சக்திகளை வலுவிழக்கவும் வைக்கும்.

இது இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகளின் எதிர்கால தரமான கல்வியை இன்னும் சிதைக்கும். மேலோங்கி உயர்ந்து நிற்றலை தாமதமாக்கும்.

கல்வியில் சமத்துவம் குழி தோண்டி புதைக்கப்பட்டுள்ளதை போலோ ப்ரைரே தனது "ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக்கான கல்வி முறை" எனும் சிறப்பார்ந்த நூலில் விளக்குகிறார். கல்வி எந்தளவு ஒரு சாராரை சமூகத்தில் உயர்த்தி, மேம்படுத்தி, மேலோங்கி எழ வைக்கிறதோ அதே வேகத்தில் இன்னொரு சாராரை ஒடுக்கி கீழிறக்கி விடுகிறது. அடிமைப்படுத்தி விடுகிறது. அழுத்தத்துக்கு உள்ளாக்கி விடுகிறது.

அவ்வாறே இந்திய அரசியலை மையப்படுத்தி வே.வசந்தி தேவி "கல்வி ஒர் அரசியல்" எனும் தனது கனங்காத்திரமான கல்வியியல் நூ லில் இந்தியாவில் அரசியல் மயப்பட்டு வரும் கல்வியின் ஆபத்தான கூறுகளை ஆதாரங்களுடன் தோலுரிக்கிறார்.

இலங்கைச் சூழமைவை பொறுத்தளவில் இது குறித்து காரசாரமான வாதங்கள் பெருமளவில் வெடிக்கவில்லையாயினும் எதிர்காலத்தில் இதன் பாதக விளைவுகளை ஒட்டு மொத்த தேசமும் அனுபவிக்கும்.

கல்வி எப்போதுமே அரசியல் சார்ந்து மையங்கொண்டதாக கட்டமைக்கப்படுகிறது. சமூக நிரலமைப்பை தமக்கு சாதகமாக தக்க வைக்கும் முனைப்புடன் மிகவும் லாவகமாக, லாவண்யமாக கல்வி நிறுவனங்கள் திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றன. ஒடுக்கப்பட்ட தாழ் நிலை அடிநிலை மக்களை இன்னும் சுரண்டி அவர்களுக்கெதிரான மர்மமான பெரும் யுத்தத்தை கல்வியின் பேரில் முன்னின்று நிகழ்த்தி விடுகின்றன.

அதில் அவை பெருத்த வெற்றியும் லாபமும் குதூகலமும் காண்கின்றன.

இயல்பாக கற்றலுடன் தொடர்புபடும் மாணவர் பரம்பரை எதிர்கொள்ளும் சவால்கள், பதிலின்மைகளுக்கு முன்னால் கல்விமுறைமை கைவிரித்து தனது கையாளாகாத்தன்மையை மௌனமாக வெளிப்படுத்துகின்றது.

சமத்துவமற்ற கல்வி என்பது வளங்களின் பங்கீட்டில் உள்ள போதாமை ஏற்றத்தாழ்வு மற்றும் தேசிய மட்ட பயங்கரமான போட்டிப்பரீட்சைகள் மூலம் வெளிப்படுகின்றன.

கைவசம் பெருந்தொகை பணமுள்ளவர்களின் சொகுசுசார் கொள்வனவுப் பண்டமாக கல்வி உருமாற்றம் செய்யப்பட்டுள்ளது. கல்வியின் மூலம் சமூக அந்தஸ்தும் செல்வாக்கும் இன்னும் உயர்த்தப்படும் நிலை மேலோங்கி எழுகின்றதே ஒழிய கல்வியின் மூலம் சாதிமுறை நீக்கப்பட்டு சமத்துவம் உயர்த்தப்படுவதில்லை.சமூக உணர்வு போஷித்து வளர்க்கப்படுவதுமில்லை.

கல்வி ஆடம்பர, நுகர்வுப்பண்டமாக பரிணமித்துள்ளது. இன்று கல்வியும் கலைத்திட்டமும் கல்வி முறையும் பரீட்சைகளும் பாடசாலைகளும் பல்கலைக் கழகங்களும் பட்டதாரிகளும் நியமனங்களும் மிகப்பெரும் சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் உரிய இடமாக மாறியுள்ளது. கையூட்டும் லஞ்சமும் முறைகேடும் மலிந்துள்ள துறையாக கல்வித்துறை மாறியுள்ளது.

கலைத்திட்டதில் கடுமையாக தகர்க்கப்பட வேண்டிய பல அம்சங்கள் உள்ளன. கலைத்திட்டத்தை மேன்மக்களே உருவாக்குவதால் அடி நிலை மக்களின் உணர்வுகள், இயல்புகள், இயலுமைகள் ஒரு போதும் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. அவர்கள் இன்னுமின்னும் பகிரங்கமாகவே நிராகரிப்புக்கு ஆளாகின்றனர். ஒடுக்கப்பட்டவர்களை தகைமையற்றவர்களாக்கும் தரங்கெட்ட நிலை கலைத்திட்டதிலும் கல்வியை போதிக்கும் முறைமையிலும் மறைமுகமாக உள்ளமை சுட்டிக்காட்டப்படவேண்டும்.

தேசிய சிறுபான்மையினங்களை மதிக்காத அல்லது அவர்களது வாழ்வியலை குரூரமாக்கும் பண்புகளும் கலைத்திட்டதில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இது சக வாழ்வை போதிக்கும் நிலையில் இனங்களுக்கிடையில் உள்ளக மோதலையும் வெறுப்பையும் விரிசலையும் இயல்பாக உருவாக்கி விடும்.

இலங்கை வரலாற்றின் கல்வித்துறையில் இது காலவரை மேற்கொள்ளப்பட்டு வந்த கல்விச் சீர்த்திருத்தங்கள் செல்வாக்கு மிக்க உயர் தரப்பினருக்கு மட்டுமே அனுகூலமாக அமைய, வலுவிழந்தோர் வழியிழந்தோராக மாறிவிடுகின்றனர்

கல்வித்துறைக்கூடாக பரிணமித்துள்ள ஒரு சில எளிய விடயங்களை மிகவும் மேலோட்டமாக மட்டுமே இங்கு நினைவூட்டுகிறோம். இத்தகைய இமாலய சவால்களை எமக்கு முன்னால் வைத்துக்கொண்டு தரமற்ற சமத்துவமற்ற கல்வியால் இந்த நவீன 21 ம் நூற்றாண்டை அதன் சவால்களை எதிர்கொள்வதும் முன்னின்று சாதிப்பதும் எல்லோருக்கும் சாத்தியமற்றதாகி விடுகிறது.

கல்விக்கண்ணை இனியாவது அகலத்திறப்போம்.




**நாச்சியாதீவு பர்வீன்**

# ஈழத்தின் நவீன கவிதை முன்னோடிகளில் முக்கியமானவர் மூத்த கவிஞர் மு.சடாட்சரன்



–பாவேந்தல் பாலமுனை பாறூக்–

ஈழத்துக் கவிஞர்களில் முக்கிய மானவராகவும்,கல்முனைப் பிரதேச கவிதை வளர்ச்சிக்கு வழிகோலியாகவும் பார்க்கப்படுபவர் கவிஞர் நீலாவணன் . கல்முனைப் பிரதேசத்தின் கவிதைப் பட்டாளத்தின் தளபதியாக அவர் பார்க்கப்பட்டார்.1950 களில் இலக்கியப் பிரவேசம் பெற்ற அவருடைய இலக்கியப் பண்ணையில் வளர்ந்தவர்கள் பலர்.

மருதூர்க் கொத்தன்,சண்முகம் சிவலிங்கம், மருதுர்க்கனி,பாண்டியூரன், எம்.ஏ. நுஃமான், ஜீவா ஜீவரெத்தினம், என்று அந்தப் பட்டியல் நீளும்.

அந்த இலக்கியப் பண்ணையில் நீலாவணனோடு மிக நெருங்கியவராக இணைந்திருந்து செயற்பட்டதனூடாகத் தன்னையும் வளர்த்துக் கொண்டவர் கவிஞர் மு. சடாட்சரன்.

1959 ல் இலக்கிய உலகில் நுழைந்து கவிதை, சிறுகதை,பேச்சு, நாடகம், நடிப்பு என்று பல்வேறு துறைகளிலும்

ஒரு தனித்துவப் பாணியில் தன்னை அடையாளப் படுத்திக் கொண்டவர்.

கல்முனை தமிழ் இலக்கியக் கழகத்தின் செயலாளராக இருந்து கிழக்கிலங்கையின் முதலாவது இலக்கியச் சஞ்சிகையாக - “பாடும் மீனை”க் கொண்டு வருவதில் முன்னின்றவர். (அப்போது, கழகத்தின் தலைவர் கவிஞர் சண்முகம் சிவலிங்கம்.சஞ்சிகை ஆசிரியர் கவிஞர் நீலாவணன்.)

அறுபது ஆண்டுகளுக்கும் மேலான இலக்கிய அனுபவம், மரபுசார் இலக்கியப் புலமை, புதிய வடிவங்களின் நுட்பங்களைப் புரிந்து கொண்டு செப்பமாகக் கையாளத் தக்க ஆற்றல், ஆளுமை என்பன வாய்க்கப் பெற்றவர் . ”மேட்டு நிலம்“(2009)சிறு கதைத் தொகுதி, பாதை புதிது(2012) கவிதைத் தொகுதி என்பவற்றை இலக்கிய உலகிற்கு தந்திருப்பவர் .

அரச சாஹித்ய மண்டல விருது, கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின

இலக்கிய நூல் விருது

கொடகே நிறுவனத்தின் சாஹித்ய விருது ,

கம்பன் கழகத்தின் மகரந்தச் சிறகு விருது,

அரசு வழங்கும் கலை இலக்கிய உயர்விருதான கலாபூஷணம் விருது

என்று பல விருதுகளைப் பெற்றிருப்பவர்,

தனது படைப்புக்களில் வாழ்வியலை,சமூக மறுமலர்ச்சியை,மானுட நேயத்தை, ஒருமைப்பாட்டை, போரியல் சூழலை கலைநயத்தோடு தருபவர். இவருடைய கவிதைகள் குறியீட்டுப் பாங்கில், படிமச் செழிப்போடு அமைந்து வருபவை யெனத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுவர்.இயல்பான மொழிநடை அவருடையது.

கலைமகளில் வெளிவந்த “பாதை புதிது” என்ற தலைப்பில் அமைந்த “போகின்றேன் பாதை புதிது வழியெங்கும் வாகை மலர்கள்...

வளைந்த கதிர்வயல்கள்.. தாகம் அகற்றும் தனி இன்பத் தேன் கனிகள்... வேகம்..”

என்று தொடரும் கவிதை

அவருடைய கவிதைச் செல் நெறியை வெளிச்சமிடும் கவிதையாக - குறியீட்டுக் கவிதைக்கு உதாரணமாகக் காட்டப் படுவதுண்டு.


மு.சடாட்சரன் மூத்த கவிஞர் மட்டுமல்ல நல்ல மனிதர். ஆர்ப்பாட்டமில்லாதவர். திறமைகளை மதிப்பவர். இளைய தலைமுறை எழுத்தாளர்களை வழிப்படுத்துவதிலும் உற்சாகம் வழங்குவதிலும் தயக்கம் காட்டாதவர் அவருடைய இலக்கிய உரைகளும் கம்பீரக் குரலும் இலக்கிய நேசர்களை ஆகர்ஷிப்பவை.

இப்பிரதேசத்தில் வெளியிடப்படும் நூல்களுக்கு மதிப்புரைகள் அணிந்துரைகள் வழங்கி அவற்றுக்கு கனதியைத் தருபவர்.

இலங்கையின் அம்பாரை மாவட்டத்தில் கல்முனையில் முருகேசு- கனகம்மா தம்பதியினரின் புத்திரனாக 06-05-1940இல் பிறந்த கலாபூஷணம் சடாட்சரன், பாடசாலை ஆசிரியராகக் கடமையாற்றி,பின்னர் கல்வி நிர்வாக சேவைப் பரீடசையில் சித்தியடைந்து உதவிக் கல்விப் பணிப்பாளராகக் தரமுயர்ந்து ஓய்வு பெற்றவர்.

பெரிய நீலாவணையில் வாழ்ந்து வரும் கல்வியியலாளர், மக்கள் கவிஞர் சடாட்சரன் அவர்களின்

அமைதியானதும் காத்திரமானதுமான இலக்கியப் பயணம் இன்னும் பல்லாண்டுகள் தொடரவேண்டும் இறைவன் அவருக்கான உடல், உள சௌக்கியத்தையும், வளங்களையும் வழங்கவேண்டுமென்பதே கலை, இலக்கிய நெஞ்சங்களின் பிரார்த்தனை யாகும்..



# மௌத்துக்கும் வராத நண்பனுக்கு....

அவர்கள் இருவரும்
மேடையில் உள்ளனர்
நானும் நீயும் என்ன
நினைக்கிறோம்
ஒருவரோ டொருவர் பேச
மாட்டார்,
பேசினாலும்
கண்ணும் கண்ணும் சந்தியாமலும்
முகத்தைக் கொஞ்சம்
சுழித்துக் கொண்டும் தான்
பேசுவர் என்றா

அவை நானும் நீயும்
செய்தவைகள்

நான்கு அல்லது
ஐந்தாம் வகுப்பில்
எனது பலூனை நீ ஊசியால் குத்த
உனது கையில் பென்சிலால்
குத்தினேன்
பின்னர் நாங்கள் பேசாதிருந்தோம்

மௌலவி ஆசிரியர்
வகுப்புக்கு வந்தார்
இஸ்லாமிய மலரில்
ஓர் உரையாடல் இருந்தது
அதனை இருவரும்
வாசிக்கச் சொன்னார்

முகத்தை நன்றாய் நீட்டிக்
கொண்டும்
கண்ணும் கண்ணும் சந்தியாமலும்
அஸ்ஸலாமு அலைக்கும்
என்று நான் சொல்ல
வ அலைக்கு முஸ்ஸலாம்
என்று நீ சொல்லி
எவ்வளவு கெதியாய்
உரையாடி முடித்தோம்.
ஆசிரியர் நம்மை போற்றி
மகிழ்ந்தார்

கோபத்தில் கூட நாம்
உண்மையாய் இருந்தோம்

இப்போது நாம் என்ன
நினைக்கிறோம் நண்பா
இவர்களும் கூட அப்படி என்றா

உனது தலைவரும்
அவரும் இன்னும்
ஒற்றுமையாகவே உள்ளனர்
நண்பா!

பண்டாரநாயக்க
மெமோரியல் ஹோலிலோ
ஐந்து நட்சத்திர
திருமண விழாவிலோ
பாராளுமன்ற
கொரிடோர் களிலோ
மேதகு எங்கள் ஜனாதிபதிமு
முன்னிலோ
மனம் விட்டு அவர்கள்
சிரிக்கின்றார்கள்

அவர்களின் கைவசம்
எல்லாமே உள்ளன
கார்கள் ஜீப் வீடு ரெலிபோன்
வேறு சொகுசுகள்
இன்னும் பற்பல

அவர்கள் இப்போது
வேறொரு சமூகம்
அவர்கள் இப்போது
வேறொரு குடும்பம்
நீயும் நானும் தான்
பேசுவதில்லை
மௌத்துக்கு கூட
வராத அளவுக்கு
கோபத்தில் கூட நாம்
உண்மையாய் இருப்பதால்
அவர்கள் இன்னும்
மேடையில் உள்ளனர்,
நண்பனே!

(10 ஒகஸ்ட் 1992)

- எச்.ஏ.அஸீஸ் -

# நியூ செட்ல் தோட்ட மக்களை சந்தித்த விழித்தெழு பெண்ணே அமைப்பு



(சமீஹா சபீர்)

விழித்தெழு பெண்ணே அமைப்பின் தலைவி சசிகலா நரேன் களுத்துறை மாவட்டத்திலுள்ள நியூ செட்ல் தோட்ட மக்களின் குறைகளை கேட்டறிந்தார்.

நியூ செட்ல் தோட்டத்தில் 150 தமிழ் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். சில அடிப்படை தேவைகளை கூட நிவர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையில் வாழந்து வரும் அம் மக்களை சந்தித்து அவர்களின் குறைகள், பிரச்சனைகளை கேட்டு அவர்களுடன் கலந்துரையாடிய நிகழ்வு அண்மையில் களுத்துறை மாவட்ட நியூசெட்ல் தோட்டத்திலுள்ள அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றது .

புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளையின் நிறுவனரும், களுத்துறை மாவட்டத்தின் சமூக செயற்பாட்டாளருமான மாதவன் தனலக்ஷ்மியின் ஏற்டபாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வில், மக்கள் தங்களுக்குள்ள பிரச்னைகளை முன்வைத்தனர்.

அதில், தங்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்களை உருவாக்கி தருமாறும், தங்கள் பிள்ளைகள் கல்விக்காக உதவுமாறும், உடைத்த நிலையில் காணப்படும் இடவசதியின்றிய வீடுகளை சீர் செய்வதற்கு உதவுமாறும் கேட்டு கொண்டார்கள்.

தேவைகளை கேட்டறிந்த சசிகலா நரேன் அங்கு உரையாற்றிய போது,

புதிய வானம் அமைப்பின் தலைவி தனலக்ஷ்மி மாதவனின் அழைப்பில் உங்கள் அனைவரையும் சந்தித்ததில் மகிழ்ச்சியடையும் அதேநேரம் எங்கள் அமைப்பின் நிறைவேற்று அதிகாரி நரேந்திரா இலங்கை வந்திருந்த போது, உங்கள் பிரச்சனைகளை அறிந்து கொண்டுள்ளார் .

மேலும், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை சந்தித்த போது அவர் சில கோரிக்கைகளை முன்வைத்தார். அதாவது, கூடுதலான கவனத்தை களுத்துறை மாவட்டத்தில் உள்ள பெண்களுக்கு செலுத்த வேண்டும் என்றும், அவர்களுக்கான சுய தொழில் ஒன்றை செய்வதற்கான வசதிகளையும் செய்து கொடுக்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

அந்த வேண்டுகோளுக்கிணங்கவே நான் இங்கு வந்துள்ளேன்.

உங்களது குறைகளை நீங்கள் முன் வைத்துள்ளீர்கள் . அவைகளை எங்கள் அமைப்பின் ஊடாக செய்து தருவதாக உள்ளோம். என்ற வாக்குறுதியையும் வழங்குகிறேன் – என்றார்.

இந்நிகழ்வில் லண்டன் பெண்கள் அமைப்பின் தலைவி ரஜனி உதயசேகரன், இலங்கை தொழிலார் காங்கிரசின் உப தலைவர் திருகேஸ் செல்லசாமி, கிரீன் சேனல் அமைப்பின் சுப்ரமணியம், கரு பத்மநாதன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

# கொள்ளைச் சம்பவங்களுக்கு இடமளித்த ரணிலுக்கு ஜனாதிபதித் தேர்தலில் பதிலடி கொடுப்போம்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் காட்டம்

கொழும்பு சுகததாச உள்ளரங்கில் கடந்த வியாழக்கிழமை ஐக்கிய மக்கள் கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது. அதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உரையாற்றும் போது, "கடந்த காலங்களில் தேர்தலொன்று இடம் பெறவிருந்த நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில், பாரிய மத்திய வங்கிக் கொள்ளை இடம்பெற்றது. இப்பொழுது அதை விட நூறு மடங்கு அதிகமான ஈ - வீசா மோசடி, பாரிய கொள்ளைச் சம்பவங்களுக்கு இடமளித்திருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் தக்க பதிலடியைக் கொடுத்தேயாகவேண்டும். இந்த மோசடி தொடர்பில் எந்தவொரு இலத்திரனியல் ஊடகத்திலும் விவாதிக்க நான் தயாராக இருக்கிறேன்". என்று கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

சில நாட்களுக்கு முன்னர், இந்த ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் எடுக்கும் தீர்மானம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடக் கூட்டத்தில் கலந்துரையாடியிருந்தோம். நாட்டின் நாலாப் புறங்களிலும் இருந்து எமது கட்சியில் உயர்பீட உறுப்பினர்கள் அந்த கலந்துரையாடலில் பங்குபற்றி அவர்களின் நிலைப் பாடுகளை முன்வைத்திருந்தார்கள். தெற்காசியாவில் பொருளாதார வளர்ச்சி விகிதம் மிகவும் அடி மட்டத்திலிருந்த நாடான எமது நாட்டிலும் முன்னைய ஜனாதிபதியைத் துரத்தியடித்தார்கள். தெற்காசியாவில் அதிக பொருளாதார வளர்ச்சி கண்ட பங்களாதேஷிலும் ஷேக் ஹசீனாவை மக்களே துரத்தியடித்துள்ளனர். இதிலுள்ள வேறுபாடு என்ன? ஷேக் ஹசீனா அனுபவமுள்ள தலைவி தான். ஆனால் நீண்டகாலமாக ஜனநாயகத்தை சீரழித்து, தேர்தலை நடத்துவதற்கு பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி, பாராளுமன்ற உறுப்பினர்களை தம்முடன் இணைத்துக்கொள்வதனுடாக தனது சர்வாதிகார அரசாங்க முறையை தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றமையினாலேயே அவருக்கு





அந்த நிலைமை ஏற்பட்டது.

இது ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிறந்த பாடமாகும். வரிசை(போலின்) யுகத்தை நிறைவுக்கு கொண்டுவந்து விட்டதாகக் கூறி அதனூடாக முன்வைக்கப்படும் கருத்துக்களுக்காக அவர் வெட்கப்பட வேண்டும்.

இவ்வாறே, அரச பொறிமுறையை தவறாகக் கையாளுகின்றார்கள். நாம் ஊழல், மோசடிகளை ஒழிப்பதாக உறுதிமொழி வழங்கியுள்ளோம். மக்கள் வங்கி கொள்ளையை விட 100 மடங்கும் அதிகமாக கொள்ளையடித்திருக்கிறார்கள் மத்திய வங்கி கொள்ளை தொடர்பில் அமைச்சரவையில் இருந்த நாங்கள் அறிந்திருக்கவில்லை. ஆனால், இந்த விசா மோசடி பட்டப்பகலில் அமைச்சரவை பத்திரத்தினூடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு இடமளித்த ஜனாதிபதிக்கு நாட்டை ஒப்படைப்பதா, இல்லையா என்ற தீர்மானத்தை எடுக்கவேண்டும். நீதிமன்ற இடைக்கால தடையுத்தரவினூடாக அவருக்கும் அவரது அரசாங்கத்திற்கும் பாடம் புகட்டியுள்ளோம்.

மறைந்த ரணசிங்க பிரேமதாசவவை சொற்ப வாக்கு வித்தியாசத்தில் ஜனாதிபதி ஆவதற்கு எங்களது மறைந்த தலைவர் எம்.எச் .எம் . ஒத்துழைத்தார் அவ்வாறே அவரது புதல்வர் சஜித் பிரேமதாச ஜனாதிபதியாக வருவதற்கு நாங்கள் ஒத்துழைப்போம் என்றார்.

# முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி

(ஜலீல்)

உக்குவளை பிரதேசத்திற்குட்பட்ட பகுதிகளுக்கு முஸ்லிம் விவாகப் பதிவாளருக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன. இதற்காக பிரதேசத்தில் நிரந்தர வசிப்பாளராகவும் சாதாரண தரம் சித்தியடைந்து மும்மொழிகளிலும் தேர்ச்சி அனுபவத்துடன் நல்ல பண்பாடுகளைக்கொண்ட விவாகமானவராகவும் இருப்பதுடன், 30 முதல் 55 வயதுக்குட்பட்டவர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிப்பவர்கள் தமது வதிவிட மற்றும் பண்பாடுகளைக் கொண்டவர் என்பதற்கான கிராம உத்தியோகத்தரது சான்றிதழ் அவசியமாகும்.

இதுகுறித்த மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பங்கள் பெற றறற.சபன.பழஎ.டம என்ற இனைய தள முகவரியில் பதிவிறக்கம் செய்யலாம். அல்லது உக்குவளை பிரதேச செயகத்துடன் தொடர்புகொள்ளலாம்.

# அரசாங்கத்தில் இருந்து விலக

## இராஜாங்க அமைச்சர்கள் தீர்மானம்

( ஐ. ஏ. காதிர் கான் )



தமது கட்சி சார்பில் நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்த, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன எடுத்த தீர்மானத்தை அடுத்து, இராஜாங்க அமைச்சர்கள் அரசாங்கத்தில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதன்படி, இராஜாங்க அமைச்சர்களான ஷசீந்த்ர ராஜபக்ஷ, தேனுக விதானகே, இந்திக அனுருத்த, டி வி சானக, பிரன்ன ரனவீர, சிரிபால கம்லத், மொஹான் டி சில்வா உள்ளிட்ட எட்டு இராஜாங்க அமைச்சர்களே இவ்வாறு அரசாங்கத்தில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளன.




தோப்பூர் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா கிளையின் புதிய கட்டிடத் தொகுதி மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாரக்கினால் அண்மையில் (08) திறந்து வைக்கப்பட்டதனையும், இந்நிகழ்வில் சேருவில பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கதீப்மார்கள், ஊர்ப்பிரமுவர்கள் பலரும் கலந்து கொண்டதனையும் படத்தில் காணலாம்.

# அவசரத் தேவைக்கு மாத்திரம் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்குமாறு வேண்டுகோள்

( ஐ. ஏ. காதிர் கான் )

"கடவுச்சீட்டு அவசரமாகத் தேவைப்பட்டால் மாத்திரம், தற்போது விண்ணப்பிக்க முடியும்" என, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திலிருந்து சர்வதேச தரத்திலான கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படும் எனவும் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் நியமங்களைப் பூர்த்தி செய்யும் புதிய "இலத்திரனியல் கடவுச்சீட்டு" (E-Passport) வழங்கப்படும் எனவும், இது உலகளாவிய கடவுச்சீட்டு சுட்டெண்ணில் இலங்கையின் நிலைமையை மேம்படுத்த உதவும் எனவும் அவர் கூறினார்.

மேலும் இப்புதிய கடவுச் சீட்டில் உரிமையாளரின் அனைத்து விடயங்களையும் சேமித்து வைக்கும் "மைக்ரோசிப்" காணப்படும் என்றும், இது உலகெங்கிலும் உள்ள விமான நிலையங்களில், கடவுச்சீட்டு உரிமையாளர் குறித்த தகவல்களைப் பெறுவதை இலகுவாக்கும் என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தென்கிழக்கு பல்கலைகழக பதில் உப வேந்தராக யூ. எல் .அப்துல் மஜீட்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தென்கிழக்கு பல்கலைகழக பதில் உப வேந்தராக பல்கலைக் கழகத்தின் தொழிநுட்ப பீடாதிபதி கலாநிதி யூ எல் அப்துல் மஜீட் நியமிக்கப்பட்டுள்ளார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக நிரந்தர உபவேந்தர் நியமிக்கப்படும் வரை இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் உப வேந்தர் பேராசிரியர் கலாநிதி ரமீஸ் அபூபக்கரின் பதவிக்காலம் நிறைவு



பெற்றுள்ள நிலையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நூலகங்களில் நிலவும் குறைபாடுகள் தொடர்பான கலந்துரையாடல்



(எம்.எம். றம்ஸீன்)

கல்முனை மாநகர சபை நிர்வாகத்தின் கீழ் உள்ள பொது நூலகங்களில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பாக கலந்துரையாடல் கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் தலைமையில் மாநகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நூலகர்கள் மற்றும் நூலக பணியாளர்கள் கலந்து கொண்டதுடன், எதிர்கால செயற்பாடுகள் குறித்தும் கலந்தாலோசனை செய்யப்பட்டது.

# மாணவர் சந்தை நிகழ்ச்சி

(எம். எப். றிபாஸ்)

அட்டாளச்சேனை அல் முனீரா பெண்கள் உயர் பாடசாலையில் மாணவர் சந்தை நிகழ்ச்சி அண்மையில் (06) நடைபெற்றது.

ஆரம்பப் பிரிவு வலயத் தலைவர் எம்.ஐ.ஜௌபரின் நெறிப்படுத்தலின் கீழ் அதிபர் ஏ. சீ.நியாஸ் தலைமையில் தரம் மூன்று மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.ரீ.எம். சியாத், ஏ.கே. அனீஸ், எம். ஏ. சுஹைரா, ஏ.ஜே.றினீஸ், ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர். தரம் மூன்று மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள், மணவர்கள் என பலரும் கலந்து கொண்டு மாணவர் சந்ததையில் வைக்கப்பட்டுள்ள பொருட்களை பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

## மனநலமும் ஆலோசனையும் 43

# எம்மை நகர்த்துவோம்



ஆம்..! எம்மை முன்னோக்கி நகர்த்துவது எப்படி? அல்லது இலக்கை அடைவது எப்படி?

அது ஒன்றும் பெரிய விடயம் அல்ல.

பேசுவதை விட எங்கள் இலக்கை அடைவதற்காக வேலை செய்வதுதான் அந்த விடயம்.

ஒவ்வொரு வெற்றிகரமான நபரும் ஏற்றுக்கொண்ட ஒரு விடயம் தான் இது.

படித்தவர், படிக்காதவர், படைப்பாற்றல் உள்ளவர், படைப்பாற்றல் இல்லாதவர் எவராக இருந்தாலும்,

இந்த விடயம் பலருக்கும் பலனாகவே இருந்து வருகிறது.

"குறைவாக பேசு, அதிகமாக வேலை செய்"

என்று சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம்.

இதன் முதல் படி,

எங்கள் நேரம் மதிப்புமிக்கது என்பதைப் புரிந்துகொள்வது...

எல்லோருக்கும் போலவே எமக்கும் ஒரே எண்ணிக்கையிலான நேரம் கிடைத்திருக்கிறது என்று ஏற்றுக் கொள்ளவது.

இரண்டாம் படி,

பேசுவதை விட நாங்கள் விரும்புவதை செய்வதற்கு அவதானம் கொடுப்பது.

அதாவது பேசிப் பேசி இருப்பதை விட செயல்பாட்டில் ஈடுபடுவது...

மூன்றாவது படி,

வேலை செய்வதற்கும் பேசுவதற்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்வது.

வேலை செய்வது என்பது நாம் இருக்கும் இடத்திலிருந்து எழுந்து, முன் சென்று வேலையை முடிப்பதற்குச் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்வதாகும்.

பேசுவது என்பது வார்த்தைகளால் விடயங்களை விளக்குவதாகும்,

இதற்கு சில சமயம் நிறைய நேரம் எடுக்கும் அதேபோன்று எங்கும் செல்ல முடியாமல் அந்த இடத்திலேயே நிற்கவைத்தும் விடும்.

ஒவ்வொரு வெற்றிகரமான நபரும் ஏற்றுக்கொண்ட ஒரு அழகான வழிமுறை தான் பேசிப் பேசி இருப்பதை விட செயல்பாட்டில் ஈடுபடுவது என்பது.

எமது இலக்கை அடைய நடவடிக்கை எடுப்பது, அல்லது ஆசை ஆர்வத்துடன் வேலை செய்வது எங்களை நகர்த்துவதற்கான அழகான வழிமுறையாகும்.

நாம் ஒன்றுக்கு முகம் கொடுக்க பயந்தாலும், அல்லது தெரியாத எத்தனை தடைகளை நாம் எதிர்கொண்டாலும், நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது செயற்பட வேண்டும்.

நாம் செயலாற்றும் போது,

- நிறைய கற்றுக்கொள்வோம்,
- புதிய யோசனைகள் உருவாக்குவோம்,
- நாம் வளர்வோம்,

நாம் மிகவும்

- ஆரோக்கியமான நபராக மாறுவோம்.
- எண்ணற்ற நன்மைகளைப் பெறுவோம்.
- இலக்கை இலகுவாக அடைவோம்.

எல்லா வெற்றியாளர்களையும் பார்த்தால்....

அவர்களின் வெற்றிக்குப் பின்னால் ஒரே ஒரு பதில்தான் கிடைக்கும்.அவர்கள் செயலாற்றினார்கள்.

முன்னோக்கி நகர்ந்தார்கள் என்பதே அந்த உண்மையான பதிலாகும்.

சில சிறிய, பெரிய தடைகள் எவற்றை சந்தித்தாலும் அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள்.

இறுதியில் வெற்றியை அடைந்து தங்களை மேம்படுத்திக் கொண்டார்கள்.

நாம் இலக்கை நோக்கி நகரும் போது மட்டுமே,

நாம் சிறப்பாக இருக்க வேண்டிய இடங்கள்...

மந்தமாக இருக்க வேண்டிய சந்தர்ப்பங்கள்..

மேற்கொள்ள வேண்டிய நுட்பங்கள் என்ன என்பதை அது நமக்கு உணர்த்துகிறது.

நாம் பேசுவதை குறைப்போம்...

செயலாற்றுவதை கூட்டுவோம்...



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**





பயாஸா பாஸில்



# அன்பின் மறு வடிவம் மனைவி

*மனைவி என்றால் அன்பின் இன்னொரு சொல் என்றும் கொள்ளலாம்!*

*பணிக்கு செல்லும் மனைவிகள் எல்லாம் குடும்பம் சுமக்கும் அன்பு தேவதைகள்!*

*ஆணுக்கு ஒரு பக்க மத்தளம் என்றால் பணிக்கு செல்லும் மனைவிகளுக்கு இரண்டு பக்க மத்தளம்!*

*பெண் என்கிற கிரீடம் அழகு தான்*

*என்றாலும் அவளை வெளியில் உள்ள சமூகம் கிள்ளி கொண்டேதான் இருக்கும்!*

*கணவர்கள் கொஞ்சம் கை கொடுங்கள். உங்களுக்காக வாழ்ந்துகொண்டு*

*இருக்கும் அந்த அன்பு பறவையை அரவணைத்து வைத்து கொள்ளுங்கள்!*

*அன்பாகப் பேசுங்கள்*

*சமையல் பணியை நேரம் கிடைக்கும் போதெல்லாம் பகிர்ந்து கொள்ளுங்கள்!!*

*மனைவிக்கு கை வலியோ, உடல் வலியோ, மனசு வலியோ புரிந்து கொள்ளுங்கள்!*

*உங்கள் மகளை கவனிப்பது போல் உங்கள் மனைவியையும்*

*கவனித்து கொள்ளுங்கள்!*

*உடல் மனசு இரண்டையும் மென்மை படுத்துங்கள்!*

*சமையலை பாராட்டுங்கள்*

*அவள் சமையல் அறையில்*

*பட்டிருக்கும் வெப்பம் தொட்ட தழும்பைப் பாருங்கள். அவை உங்களுக்காக*

*அவள் பட்ட அன்பின் சின்னம்.*

*அவள் செய்வது சமையல் அல்ல. அன்பின் அழகு.*

*தினசரி நன்றி சொல்லுங்கள்.*

*குறுந்தகவல்களை மனைவிக்கும் அனுப்பலாமே!*

*அவள் குடும்பத்திற்காக எரியும் இன்னொரு மெழுகுவர்த்தி.*

*வாழ்க்கை முழுதும் கூட வரும் அன்பு தேவதை!!*

*கடவுள் நம்முடன் இருக்கமுடியாது என்பதற்காக கடவுள் கொடுத்த வரம் அன்னையும் மனைவியும்!*

*அவள் கண்களில் கண்ணீர் வராமல் பார்த்து கொள்ளுங்கள்.*

*மூன்றாவது கையாக நீங்கள் இருங்கள். பெண் கண்ணீர் விட்டால் அங்கே செல்வம் தங்காது....*

**நிலாத்தோழி**
**(பரீனா பின்த் இஸ்ஹாக்)**

# மூத்தம்மாவின் புடவை



அடுப்புப் புகைக்குள்ள நிண்டுட்டு சோறோ, கறியோ ஆக்குற நேரத்துல, சுடுகிற சட்டி பானையத் தூக்குறத்துக்கு நாலஞ்சி புடவைத்துண்டு கிடந்தாலும் சொல்லாமக் கொள்ளாம அவசரமா கொதிக்கிற தேயிலைப்பானைய அடுப்புல இருந்து இறக்கி வைக்க அடிக்கடி உதவும்.

பெரியப்பா கொண்டு வந்த கொள்ளியெல்லாம் கொத்திப் பிரிச்சி அடுக்கி வெய்க்கிற நேரத்துல, கழுத்துக்குள்ளால வழிஞ்சி ஓடுற வேர்வையத் துடச்சிப் போட்டுட்டு அடுத்த வேலைய உடனே பார்க்க உதவும்.

கிணத்தடிய போய் நிண்டு கை, கால், முகம் அவ கழுவினாலும் சரி. புள்ளைகள் கழுவினாலும் சரி. உடனே முகம் துடைக்க உதவும்.

வெயிலுக்க புள்ளையளத் தூக்கிட்டு போற நேரத்துல, புள்ளையள்ற தலைக்கு மேல வெயில் படாம குடையா விரிய உதவும்.

காலையில வீட்ட விட்டு போகக்குல குடை எடுத்துட்டு போகச் சொல்லியும் கேக்காம, மழையில நழைஞ்சி வார புள்ளையள்ட தலைய ஏசிக்கிட்டே துடைக்க உதவும்.

கால்லயோ கையிலயோ ரத்தக் காயத்தோட ஓடிவார புள்ளைக்கி கையாந்தகரை அரைச்சி வெச்சி மருந்து கட்ட உதவும்.

கண்ணைக் கசக்கிட்டு நிக்கிற அளவுக்கு ஏதெண்டாலும் ஒரு சம்பவம் நடந்தா,

மூக்குச் சீறிச்சீறி அழுது வடிக்க உதவும்.

கையில சொப்பின் பேக்குக் கொண்டுபோகாத நேரத்துல குறிஞ்சாவோ, வாதமடக்கியோ ஏதோ ஒண்ட பிச்சிப் போட்டு மடிக்குள்ள கட்டிட்டு வர உதவும். தட்டோ, சுளகோ, பீங்கானோ, கோப்பையோ ஈரமா இருந்தா துடைச்சிக் கிடைச்சி காயவைக்க உதவும்.

கிணத்துலயோ, மடுவுலயோ அள்ளி எடுக்குற தண்ணிய தூசி இல்லாம குடத்துக்க வடிகட்ட உதவும்.

தடுமல் வந்து மூக்கொழுகச் சுத்தி வார பேரப்புள்ளைட மூக்கைத் துடச்சி எறிஞ்சிட்டு அந்தப் புள்ளைய அள்ளிக் கொஞ்ச உதவும்.

புட்டுப் பானைக்கு ஓரம்கட்ட, வண்டப்பப் பானைக்கு வன்டுகட்ட, ஊற வெச்ச பச்சரிசியக் காய வைக்க, முந்தானைத் தொங்கல்ல காசி முடிஞ்சி வெய்க்க எண்டு இப்பிடியும் உதவும்.

எங்கயோ எதுலயோ விழுந்து நெத்தி புடைச்சிப் போன புள்ளைக்கி, முடிச்சிக்கட்டி வாயால ஊதி உடனடியா ஒத்தடம் குடுக்க உதவும்.

கடைசில, புதுசாப் பொறந்த புள்ளைக்கு பழைய புடவை ஒண்டு புதிய தொட்டிலா மாறி ஆராரோவோடு சேர்ந்து ஆலோபம் பாடவும் உதவும்.



சென்னை பைவ் ஸ்டார் தனியார் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் சனியன்று மாநில முதன்மை துணைத் தலைவரும், தமிழ்நாடு வக்ப் வாரிய தலைவருமான எம். அப்துல் ரஹ்மான் அவர்களை சிங்கப்பூர் ராயல் கிங்ஸ் நிறுவனர் சிராஜ்டீன் மரியாதை நிமித்தமாக சந்தித்து ஸாலிஹீன் அறக்கட்டளை சார்பில் மருத்துவ கல்லூரி தொடங்கும் திட்டத்தை பற்றி இருவரும் பேசினார்கள். உடன் சிங்கப்பூரைச் சேர்ந்த கிளியனூர் ஜாகீர் உசேன், பைவ் ஸ்டார் இக்பால்,மூத்த ஊடகவியலாளர் திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது மற்றும் பலர் உடன் இருந்தார்கள்.



அரபாத் பஹுர்தீன்

# உலக சாதனையுடன் தங்கம் வென்றார் பாகிஸ்தானின் தங்க மகன்

## அர்ஷத் நதீம்

பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் பாகிஸ்தானை சேர்ந்த ஈட்டி எறிதல் வீரர் அர்ஷத் நதீம் 92.97 மீற்றர் தூரம் எறிந்து உலக சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்று வரலாறு படைத்தார்.
பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் இடம்பெற்று வரும் ஒலிம்பிக் போட்டியில் பாகிஸ்தானை பிரதிநிதித் துவம் செய்து அர்ஷத் நதீம் களம் கண்டிருந்தார். அவர் முதல் சுற்று மற்றும் 2ஆம் சுற்று, காலிறுதி மற்றும் அரையிறுதி போட்டிகளில் சிறந்த பெறுபேறுகளுடன் இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார். அதனடிப்ப டையில் இடம்பெற்ற இறுதி பகுதியில் பங்கேற்ற அர்ஷத் நதீம் தன் 3 எறிதல் சந்தர்ப்பங்களில் ஒலிம்பிக் வரலாற்றிலேயே ஈட்டி எறிதல் இறுதிப் போட்டியில் இரண்டு முறை 90 மீட்டருக்கும் அதிகமாக ஈட்டியை எறிந்த மாபெரும் சாதனை படைத்தார்.
ஒலிம்பிக் வரலாற்றில் மூன்று வீரர்கள் மட்டுமே 90 மீட்டருக்கும் அதிகமான தூரத்திற்கு ஈட்டியை எறிந்துள்ளனர். அதில் நோர்வேயை சேர்ந்த ஆண்ட்ரியாஸ் என்பவர் 90.57 மீட்டர் தூரம் வீசியதே இதுவரை ஒலிம்பிக் ஈட்டி எறிதல் சாதனையாக இருந்தது.
அந்த சாதனையை இந்த இறுதிப் போட்டியில் இரண்டு முறை அர்ஷத் நதீம் முறியடித்தார். தனது இரண்டாவது முயற்சியில் 92.97 மீட்டர் தூரம் ஈட்டியை வீசி ஒலிம்பிக் சாதனையை உடைத்தெரிந்து புதிய உலக சாதனையை படைத்து வரலாற்றில் தன் பெயரை பதித்துக் கொண்டார்.
அத்துடன் இதுவரையில் பாகிஸ்தான் நாட்டினை பிரதிநிதித்துவம் செய்து ஒலிம்பிக் போட்டிகளில் தனிநபர் தங்கப் பதக்கம் வெல்வது இதுவே முதல் முறையாகும்.
இந்த போட்டியில் இந்தியா வின் நீரஜ் சோப்ரா 89.45 மீட்டர் தூரம் வீசி இரண்டாவது இடம் பிடித்து வெள்ளிப்பதக்கம் வென்று இருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.
அத்துடன் அர்ஷத் நதீம் தங்கப் பதக்கம் வென்றதன் மூலமாக பாகிஸ்தான் 32 ஆண்டுகளுக்குப் பின் ஒலிம்பிக் பதக்கம் வென்று இருப்பது குறிப்பிடத்தக்கது.

# பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகள்

# முதலிடத்திற்காக கடும் போட்டி போடும் அமெரிக்கா மற்றும் சீனா



பிரான்ஸ் நாட்டின் பாரீஸ் நகரில் ஒலிம்பிக் போட்டிகள் கோலாகலமாக நடைபெற்று வருகின்றன. பல்வேறு நாட்டு வீரர், வீராங் கனைகள் தங்களது அபார திறமையை வெளிப்படுத்தி பதக்க வேட்டை களை நடத்தி வருகின்றனர்.
ஒலிம்பிக் தொடரின் பதக்க பட்டியல் தங்கப் பதக்கத்தின் அடிப்படையிலேயே வரிசைப்படுத்தப்படும். அதற்கு அடுத்து வெள்ளிப் பதக்கம் மற்றும் வெண்கல பதக்கங்களின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்படுகிறது.
இந்நிலையில், பதக்க பட்டியலில் முதலிடம் பிடிப்பதில் அமெரிக்கா மற்றும் சீனா இடையே கடும் போட்டி நிலவுகிறது.
தற்போது பதக்க பட்டியலில் 33 தங்கம், 39 வெள்ளி மற்றும் 39 வெண்கலம் என 111 பதக்கங்களுடன் அமெரிக்கா முதல் இடத்தில் உள்ளது.
33 தங்கம், 27 வெள்ளி, 23 வெண்கலம் என மொத்தம் 83 பதக்கங்களுடன் சீனா 2வது இடத்திலும், 18 தங்கம், 16 வெள்ளி, 14 வெண்கலம் என 48 பதக்கங்களுடன் அவுஸ்திரேலியா 3வது இடத்திலும் உள்ளது.
இந்தியா ஒரு வெள்ளி, 5 வெண்கல பதக்கங்களுடன் 69வது இடத்தை பிடித்துள்ளது.
அதேசமயம், பாகிஸ்தான் ஒரே ஒரு தங்க பதக்கம் வென்று 59வது இடத்தில் உள்ளது. மேலும் இலங்கை சார்பில் பங்கேற்ற வீர வீராங்கனைகள் எந்தவித பதக்கமும் இன்றி நாட்டை வந்தடைந்திருந்தனர்.
இந்தியா 5 வெண்கல பதக்கங்கள் மற்றும் ஒரு வெள்ளி பதக்கம் வென்றுள்ளது. ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா ஒரு வெள்ளி பதக்கம் வென்றார்.
துப்பாக்கி சுடுதலில் இந்தியா 3 வெண்கல பதக்கங்களை வென்றது.
ஆண்கள் ஹாக்கியில் மற்றொரு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.
மல்யுத்தத்தில் ஒரு வெண்கலம் கிடைத்தது. இதையடுத்து, 6 பதக்கங்களுடன் இந்தியா 69வது இடத்தில் உள்ளது.

# உலக முஅய் தாய் சம்பியன்ஷிப் தொடரில் கஹட்டோவிட்டவின் மூன்று வீரர்கள்




உலக முஅய் தாய் (ifma youth) சம்பியன்ஷிப் போட்டிகள் செப்டம்பர் 12 ஆம் திகதி தாய்லாந்தில் ஆரம்பமாக உள்ளது. இப் போட்டித் தொடரில் இலங்கையிலிருந்து 30 வீரர்கள் பங்கேற்கவுள்ளனர். இவர்களுள் கஹட்டோவிட்ட கிராமத்தைச் சேர்ந்த மூவர் உள்ளடங் கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஸ/மர் தில்ஷாத், பதாஹ் நூர் உலக முஆய் தாய் சம்பியன்ஷிப் தொடரில் கஹட்டோவிட்டவின் மூன்று வீரர்கள்..! முஹம்மத், அஷ்மல் அஷ்ரப் அலி ஆகிய மூன்று வீரர்களே இவர்களாவர். கஹட்டோவிட்டவைப் பிறப்பிடமாகக் கொண்ட இம் மூன்று வீரர்களும் கடந்த காலங்களில் நடைபெற்ற தேசிய மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் பதங்கங்களை வென்றிருந்தனர். இந்த வாரம் இடம்பெற்ற தகுதிகாண் போட்டிகளில் இம் மூவரும் உலக சாம்பியன்ஷிப் போட்டித் தொடரில் பங்கேற்கும் வாய்ப்பை பெற்றுள்ளனர்.
அமெரிக்க, ஐரோப்பிய,ஆசியப் பிராந்தியங்களைச் சேர்ந்த 120 நாடுகளின் போட்டியாளர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.
கஹட்டோவிட்டவில் இவர்களுக்கான பயிற்சிகளை பயிற்சியாளர் முஆத் வழங்கி வருகிறார்.

# சீனன்னோட்டை ஸன்ரைஸ் கழகத்திற்கு A.N.Gems அனுசரணை




(பேருவளை : பீ.எம் முக்தார்)
களுத்துறை மாவட்டத்தில் முன்னணி உதைப்பந்தாட்ட கழகமான பேருவளை சீனன்கோட்டை ஸன்ரைஸ் விளையாட்டுக் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க பேருவளை சீனன்கோட்டை ஏ.என்.ஜெம்ஸ் (A.N.Gems) களுத்துறை லீக் உதைப்பந் தாட்ட சுற்றுப் போட்டிக்கு பூரண அனுசரணை வழங்க முன்வந்துள்ளது.
இதற்கான காசோலை கைய ளிக்கும் நிகழ்வு சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் விளையாட்டரங்கில் நடைபெற்றது.ஏ.என்.ஜெம்ஸ் உரிமையாளர்களான அர்க்கம் அஸ்லம்,நபீல் இஸ்மத் ஆகியோர் 500,000.00 ரூபாவுக் கான காசோலையை இதன்போது கழக தலைவர் முஹம்மத் இஹ்ஸ ாஸ், உபதலைவர் அல்-ஹாஜ் அன்ஸ ார் ஜ/னைத்,செயலாளர்ஹிஸான் ஹாசிம், முகாமையாளர் ஸாலி இஸ்மாயில், கழக உப கெப்டன் முஹம்மத் முஸாஹில் உட்பட விளையாட்டு வீரர்கள் முன்னிலையில் கையளித்தனர்.
களுத்துறை உதைப்பந்தாட்ட சங்கம் நடத்தும் இச் சுற்றுப் போட்டியில் 16 முன்னணி விளையாட்டு கழகங்கள் பங்கு பற்றுகின்றன என்பது குறிப்பிட த்தக்கது. இதில் ஏ,பி இரு குழுக்களாக சுற்றுப்போட்டியில் அணிகள் மோதுகின்றன.
கடந்த 03.08.2024 இல் களுத்துறை வேர்னன் பெர்ணாந்து விளையாட்டரங்கில் நடைபெற்ற முதலாவது போட்டியில் சீனன் கோட்டை ஸன்ரைஸ் விளையாட்டுக் கழகமும் பெருந் தொட்டை விளையாட்டுக் கழகமும் மோதியபோது சன்ரைஸ் அணி 9-0 என்ற கோள் விதத்தில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.
இரண்டாவது சுற்று போட்டிகள் எதிர்வரும் 25-8-2024 திகதி இடம்பெறவுள்ளன. ஏ குழுவில் எட்டு அணிகள் பங்குபற்றுவதோடு 7 போட்டிகள் நடைபெறும்.
சன்ரைஸ் விளையாட்டு கழகத்தின் பயிற்சியாளராக கொழும்பை சேர்ந்த எம். ரஹ்மானும் கோல்காப்பாளர் பயிற்சியாளராக களுத்துறையைச் சேர்ந்த மனோஜூம் கடமையா ற்றுகின்றனர்.
இந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய ஸன்ரைஸ் விளையாட்டுக் கழக செயலாளர் எம்.ஹிஸான் ஹாசிம் - களுத்துறை உதைப் பந்தாட்டச் சங்கம் நடத்தும் உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டிக்கு அனுசரணை வழங்க முன்வந்த ஏ. என்.ஜெம்ஸ் உரிமையாளருக்கு நன்றி கூறினார். உதைப்பந்தாட்ட துறையை முன்னேற்ற மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஏ. என்.ஜெம்ஸ் (A.N.Gems) வழங்கும் ஒத்துழைப்பை இம்மாவட்ட உதைப்பந்தாட்ட வீரர்கள் மறக்க மாட்டார்கள் எனவும் கூறியிருந்தார்.
ஐந்து தசாப்தங்களை பூர்த்தி செய்துள்ள சீனன்கோட்டை ஸன்ரைஸ் கழகம் மாவட்ட, மாகாண,தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் போட்டிகளில் பங்கு பற்றிய வீரர்களை உருவாக்கிய ஒரு முன்னணி விளையாட்டுக் கழகமாகமாகும்.
எதிர்வரும் நவம்பர் மாதம் இதன் 50 ஆவது வருட பூர்த்தி விழாவை மிக விமர்சையாக கொண்டாடுவதற்கு ஏற்பாடுகளை செய்து வருகிறோம் என்றும் அவர் கூறினார்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.